# நீர்குமிழி



## பராபரன்

வெளியீடு: பராபரம் பாடசாலை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நீர்குமிழி பகுதி – 1,2,3 |
| ஆசிரியர் | : | பராபரன் |
| வெளியீடு | : | பராபரம் பாடசாலை |
| மொழி | : | தமிழ் |
| நூல் வகை | : | தன்னாட்டம் |
| முதற்பதிப்பு | : | 2023 |
| பக்கங்கள் | : | 65 |
| உரிமை | : | அனைவருக்கும் |
| விலை | : | அகவிழிப்பு |

# என்னுரை

பிரக்ஞனும், பிரபஞ்சநாதனுமாகிய ஈஸ்வரன் **நீர்குமிழி** என்ற தலைப்பில் **பராபரன்** என்ற நாமம் கொண்டு இந்நூலை இயற்றி சமர்பிக்கிறார்.

இந்நூல் உருவான பின்புலம், ஒரு நாள் மாலை வேளை நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது, அந்த மழை சாரலை பார்த்துக்கொண்டு தேனீர் அருந்தியபடி நாற்காலியில் அமர்ந்திருந்தேன், தரையில் தேங்கிய நீரில் மழை துளிகள் விழுந்து நீர்குமிழிகள் உண்டாகி உண்டாகி மறைந்தன.

அக்கனபொழுதில் உண்டான சிந்தனையே **நீர்குமிழி** என்ற இப்படைப்பு. இந்நூலினை அன்பர்களிடம் பகிருவதில் மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. இந்நூலில் மனவிசாரத்தை மையமாக கொண்டு பல விஷயங்கள் எளிமையாக விளக்கி தரப்பட்டுள்ளது.

ஆத்ம சாதகர்கள் இந்நூலை படித்து, கருத்துக்களை நன்றாக உள்வாங்கி, தாங்கள் ஏற்றுக்கொண்ட வாழ்க்கை முறையில் இருந்து கொண்டே, மனதை விசாரம் செய்து தன்சுயத்தில் நிலைபெறுவதற்கு எல்லா வகையிலும் இந்நூல் உதவும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இந்நூலினை படிக்கும் அன்பர்கள் அனைவரின் சிந்தையிலும் எல்லாம் வல்ல ஈஸ்வரன் நன்றாக விளங்கும்படி செய்யுமாறு பணிகின்றேன்.

**அன்புடன்,**

**பராபரன்**

# பகுதி - 1



அது ஒரு மழைக்காலம், நன்றாக மழை பெய்து ஊரில் உள்ள ஏரி, குளம், குட்டை, நதி எல்லாவற்றிலும் நீர் நிறைந்து வழிந்து ஓடிகொண்டிருந்தது.

ஒரு **வழிப்போக்கர்**! ஆம் அவரை இப்படைப்பில் வழிப்போக்கர் என்றே அழைக்க வேண்டும். அந்த ஊரின் வழியே பயணித்து நதியோரமுள்ள அரச மரத்தடியில் அந்த இரவு நேரத்தை தான் தங்குவதற்கு தேர்வு செய்தார்.

மறுநாள் அதிகாலை அவர் விழித்த போது, அதிகாலை வேளை என்பதால், இயற்கை தத்தம் பாணியில் அந்நாளை துவங்கியது (சூரியன் மெல்ல எழ, குயில்கள் கூவ, மயில்கள் அகவ, வண்டுகள் ரீங்காரமிட, குரங்குகள் தன்னை கட்டிக்கொண்டுள்ள குட்டிகளோடும் கூட்டத்தோடும் அரச மரத்தில் ஆட்டம்போட்டுக் கொண்டிருக்க, நதியின் தண்ணீரோ பாறைகளில் முட்டி மோதி சலசலத்து நீர்க்குமிழிகளுடன் ஓடிக் கொண்டிருந்தது). இந்த சக்தி ப்ரவாகமாகிய படைப்பை எல்லாம் ரசித்தப்படி, அந்த வழிப்போக்கர் நதியில் இறங்கி நீராடிவிட்டு கரையோரம் அமர்ந்தார்.

அப்போது ஒரு குரல், ஐய்யனே! அவர் சுற்றும் முற்றும் பார்த்தார், மீண்டும் அதே குரல் ஐய்யனே! இம்முரை சத்தம் தண்ணீரின் பக்கமிருந்து வந்தது, ஆகையால் நதியை உற்று கவனித்து யார் என்று வினவினார்?

தண்ணீரிலிருந்து ஒரு **நீர்க்குமிழி**, ஐயா நான் பேசுவது தங்களுக்கு கேட்கிறதா என்று வினவியது? அதற்கு அவர் நன்றாக கேட்கிறது என்று பதிலளித்து, பேசுவது யார் என்று கேட்டார், நான் நீர்க்குமிழி பேசுகிறேன் ஐய்யனே என்று பதிலளித்தது.

இந்த நதிக்கு வரும் எல்லோரிடமும், எல்லாவற்றுடனும் நான் பேச முயற்சித்துள்ளேன், ஆனால் இதுவரை என் குரல் யாருடைய செவிஅறிவிற்கும் எட்டவில்லை.

என் போன்ற நீர்குமிழிகள், தாவரங்களில் பட்டு உடைந்து விடுவோம், அல்லது பறவை மற்றும் மிருகங்கள் எங்களை உடைத்துவிட்டு நீர் அருந்திச் சென்றுவிடும், உம்போன்ற மனிதர்களோ எங்களை கண்டுக்கொள்ளவே மாட்டார்கள். இன்று தான் முதல் முறை என் குரலுக்கு தாங்கள் செவிசாய்த்துள்ளீர்கள், நான் மகிழ்கிறேன்!!!

நான் தங்களுடன் சற்று உரையாடலாமா என்று அவரிடம் பணிந்தது. அவரும் அதற்கு இசைந்தார்.

**நீர்குமிழி:** ஐய்யனே தாங்கள் யார்?

**வழிப்போக்கர்:** இந்த படைப்பு தோன்றுவதற்கு எது ஆதாரமாக இருந்ததோ அதுவே **நான்** என்றார்.

**நீர்குமிழி:** அப்படியானால் தங்களை எவ்வாறு அழைப்பார்கள்?

**வழிப்போக்கர்:** நான் நாமரூபமற்றவன், அகையால் இந்த வந்து போகின்ற இப்படைப்பை படைத்துக் கொண்டவன் எவனோ? அவனே நான் என்றார்.

**நீர்குமிழி:** ஆனால், என்னால் தங்களை காணமுடிகிறதே? என்றது.

**வழிப்போக்கர்:** என் ப்ரியமான நீர்குமிழி, நீ காணுகின்ற உடலை பார்த்து, என்னை பார்பதாய் தவறாக எண்ணுகிறாய். உண்மையில் **நான் இந்த உடல் வருவதற்கு முன்னும், உடல் இருக்கும் போதும், உடல் போன பின்னும் எப்பொழுதும் இருப்பவன்** என்றார்.

**நீர்குமிழி:** ஐய்யனே, நீங்கள் உடலில்லை என்றால் தாங்கள் யார்? எங்கு, எப்படி இருக்கீறீர்கள்?

**வழிப்போக்கர்:** அன்பே, **நான் ஆத்மா**! எங்கும், எப்பொழுதும், எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறேன்.

**நீர்குமிழி:** எல்லாவற்றிலும் இருக்கிறேன் என்றால் என்னுள் இருப்பதும் நீங்களா?

**வழிப்போக்கர்:** குழந்தாய், நான் இருப்பதனாலேயே நீ இருக்கிறாய்! என்றார் சிரித்தபடி.

**நீர்குமிழி:** ஐயா, எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது, எவ்வாறு ஒன்றேயான நீங்கள் எங்கும், எப்பொழுதும், எல்லாவற்றிலும் நீக்கமற இருக்க முடியும்? சற்று தெளிவுப்படுத்துங்கள்?

**வழிப்போக்கர்:** என் மைந்தா கேள், எவ்வாறு பஞ்சபூதங்களில் **ஆகாயம்** எங்கும், எப்பொழுதும், எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ளதோ, அது போலவே நானும். **நான் இருப்பதினாலேயே இப்படைப்பு இருக்கிறது**. ஆகாயத்தை பற்றி கூறினேன் அல்லவா, அந்த ஆகாயத்திற்கும் ஆதாரமாக நானே இருக்கிறேன் என்பதையும் புரிந்து கொள்.

**நீர்குமிழி:** ஐயா தாங்கள் கூறுவதை சிந்தித்தால், **இருப்பதெல்லாம் நீங்களே** என்ற விடை வருகிறதே? ஆனால் என்னால் இங்கு இந்த நதியில் ஆடுகள், மாடுகள், குளிக்கும் மனிதர்கள், செடி கொடிகள் என எல்லாவற்றையும் காணமுடிகிறதே? என்றது.

**வழிப்போக்கர்: இருப்பதெல்லாம் இறைவனே -** அது **நான்** தான். நீ காணுகின்றவையெல்லாம் புலன்களுக்கு விஷயமாகும் உடல்களே, நான் கூறுவதோ உன்னுள்ளும், என்னுள்ளும் எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் இயக்கி கொண்டிருக்கும் அந்தர்யாமியாகிய **ஆத்மா**வை பற்றி. இவ்வுண்மையை உணர்ந்த ஞானிகள்

காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன்
கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா;
பார்க்கு மரங்கலெல்லாம் நந்தலாலா -நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா;
கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா - நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா;
தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா-நின்னைத்
தீண்டுமின்பம்ந் தோன்றுதடா நந்தலாலா **- பாரதியார்**

என்று இருக்கின்ற அனைத்திலும் ஆத்மாவாகிய இறைவ(தன்)னை உணர்ந்து பாடி திளைத்து இருக்கின்றனர்.

**நீர்குமிழி:** இந்த உண்மையை எவ்வாறு புரிந்து கொள்வது? இதற்கு ஏதேனும் செயல்கள் புரிய வேண்டுமா?

**வழிப்போக்கர்:** இந்த உண்மையை புரிந்து கொள்வதற்கு, மனதை நன்றாக விசாரித்து, மனம் ஏற்றி வைத்து கொண்ட எண்ணங்களில் (தப்பறிவாகிய அறியாமையில்) இருந்து விடுபட்டு, நம்முடைய சுயமாகிய ஆத்மாவிற்கு திரும்புவது தான் ஒரே வழி.

**நீர்குமிழி:** ஐயா, மனம் ஏற்றி வைத்துகொண்ட எண்ணம் (தப்பறிவாகிய அறியாமை) என்பது என்ன?

**வழிப்போக்கர்:** தப்பறிவு (அறியாமை) என்பது ஒருவர் தன்னாலும், பிறராலும், தெளிவில்லாத கல்வி முறையாலும், அறியாமையாகிய இருமைகளின் (விருப்பு/வெறுப்பு) காரணத்தால் ஏற்பட்ட அனுபவங்களினாலும் தன்னுடைய மனதின்கண் பதிந்த எண்ண குவியல் (சித்தம்).

எவ்வாறு ஒரு காலியான மனையில் கட்டிடம் கட்டப்படுகிறதோ, அவ்வாறு இந்த உடல் நான், மனம் நான், இவற்றினால் ஏற்படும் இருமைகளினால் நான் இன்புருகிறேன், நான் துன்புருகிறேன் என்று சித்தத்தில் அறியாமையினால் சேகரித்து கொண்டு விடுகிறோம், இந்த தப்பறிவே நம் சுயமாகிய ஆத்மாவை அறிய தடையாக இருக்கின்றன.

**நீர்குமிழி:** இந்த அறியாமை எவ்வாறு நம் சுயத்தை அறிய தடையாக இருக்கின்றன?

**வழிப்போக்கர்:** உதாரணமாக ஊருக்கு புதிதாக வரும் ஒரு நபர் அந்த ஊரிலுள்ளவரிடம், தான் செல்லவிருக்கும் விலாசத்திற்கு வழி கேட்பது ஒரு சகஜமான நிகழ்வு. அந்த ஊர்காரர் சமீபத்தில் செய்திகளின் மூலமாக, விலாசம் கேட்பது போல் வழிபறி செய்கிறார்கள் என்று படித்துள்ளார், அதனை பற்றி முழுமையாக சிந்திக்காமல்/ஆராயாமல், தான் படித்த தப்பறிவை மனமாகிய சித்தத்தில் சேகரித்துக் கொண்டுவிட்டார் என்று வைத்து கொள்வோம்.

இந்த தப்பறிவால், அவருடைய மனதில் இப்போது சந்தேகம், பயம், தெளிவின்மை, கோவம், வெறுப்பு போன்ற தேவையில்லாத குணங்கள் குடி கொண்டுவிட்டது.

இப்போது இவரிடம் யார் வந்து வழிக் கேட்டாலும், அந்த நபரை மோசடி செய்பவரோ என்று எண்ணி உதவாமல் விலகத் தோன்றும், சந்தேகிக்க தோன்றும், அந்த நபர் மேல் தேவையில்லாத பயம் அல்லது கோவம் தோன்றும், இந்த உணர்ச்சிகளால் அவரின் உதவி மனபான்மை தடைபடுகிறது, இது அவருக்கும் சமுதாயத்திற்கும் ஒரு தடையே.

இது போல நாம் வாழ்வில் எத்தனையோ செயல்களை செய்கிறோம், ஆனால் ஏன் செய்கிறோம்? எதற்கு செய்கிறோம்? என்று மனதை விசாரிக்காமல் ஒரு இயந்திரம் போல் செயல்படுகிறோம், இதனால் தனக்கும் எந்த பயனுமில்லை, சமுதாயதிற்கும் எந்த பயனுமில்லை என்பதை புரியாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

ஒரு கட்டத்தில் இந்த அறியாமை தான், தனக்கு தடையாக இருக்கிறது என்று தன்னாலோ அல்லது பிறர் மூலமோ விளக்கப்பட்டாலும், மனதிற்கே உரிய அஹங்கார மமகாரத்தினால் அதனை விடுவதற்கு தயாராகயில்லை.

**நீர்குமிழி:** ஐயா அப்படியானால் மனதை விசாரம் செய்ய பூஜை, ஆலய வழிபாடு, புனித நீராடுதல், மந்திர ஜபம், யோகாஸனம், ப்ராணாயாமம், த்யானம், சாஸ்திரங்கள் கற்பது போன்றவற்றில் மனதை ஈடுபடுத்தலாமா?

**வழிப்போக்கர்:** அன்பான நீர்குமிழி! படைப்பில் ப்ரத்யேக அறிவாகிய ஆறாம் அறிவை பெற்ற மனிதன், தன்னுடைய மனதை விசாரம் செய்யாமல் வேறு எந்த செயல் செய்தாலும் அது வேறோர் செயல் மட்டுமே. மேலும் இந்த புதிய செயல்களிலுள்ள சாதக பாதகங்களிலான இருமைகளில் மாட்டிக் கொள்கிறான். அதுவே அவனுக்கு தன் சுயத்தை அறிய தடையாகி விடுகிறது. மேலும் இச்செயல் முறைகளை சற்றே சிந்தித்தோமானால் நமக்கு தெளிவு உண்டாகும்.

**பூஜை முறைகள்:**

மனிதனின் மனம் சிறு பிள்ளையாய் இருக்கும் போது, இறைவனை பற்றிய புரிதலுக்காக, ஒரு சிலையையோ, படத்தையோ, யந்திரத்தையோ வைத்து அபிசேக அலங்கார பூஜை செய்து, இந்திரியங்கள் மற்றும் மனதை தேவையற்ற சிந்தனைகளிலிருந்து திசை திருப்பி, இறை உணர்வை உணர்வதற்கு ஒரு படியாக பூஜை என்னும் செயல் முறையை சான்றோர்கள் வகுத்தனர்.

சான்றோர்கள் இம்முறையை வகுத்ததன் நோக்கம், பின்னாளில் இந்த சிறுபிள்ளை உடல் மற்றும் மனதளவில் வளர்ந்து, நாம் ஏன் இந்த பூஜை முறைகளை தினமும் செய்கிறோம், இதனால் ஆவதென்ன? என்ற சிந்தனை அவனுடைய மனதில் பிறக்க வேண்டும் என்பதற்காக.

ஆனால் பெரும்பாலான மனித மனங்களோ, தனக்கு சிறு பிள்ளை பருவத்தில் மனதில் சேகரித்து கொண்ட தொகுப்பான பூஜை செயல்களிலேயே மயங்கி, வாழ்நாள் முழுவதும் பூஜைகளை மட்டுமே செய்துகொண்டு, **நான் நித்தமும் பூஜை செய்கிறன்** என்ற அஹங்கார மமகாரம் கொண்டு தவறான புரிதலில் வாழ்நாளை கழிக்கின்றனர்.

இந்த பூஜை முறை செய்யும் பொழுது, இறைவனுக்கு படைக்கிறேன் என்று உயிர் பலி கொடுப்பதும், உடல் மற்றும் மனதை வருத்தி கொள்ளும் செயல்களை செய்வதும், இதுபோன்ற எண்ணற்ற மூடநம்பிக்கைகளில் சிக்கி அதிலிருந்தும் விடுபடமுடியாமல் அரிதான இந்த மானிட பிறவியின் நோக்கத்தை புரியாமல் தொலைத்து விடுகின்றனர்.

இங்கு கூற வரும் கருத்து **புஜை செய்ய வேண்டாம் என்றில்லை, மனதை விசாரிக்காமல் வெறும் பூஜை முறைகளால் மட்டும் இறை உணர்வை உணர இயலாது**. அப்படி பூஜை காரியங்களால் இறை உணர்வு சாத்தியமாகுமெனில், இவ்வுலகில் ஞானிகள் மட்டுமே இருந்திருப்பார்கள், ஆனால் உலகம் அவ்வாறு இல்லை என்பதே நிதர்ஸனம்.

## <u>ஆலய வழிபாடு மற்றும் புனித நீராடுதல்:</u>

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று** என்று சான்றோர்கள் வாக்கு. இதனுடைய நோக்கம், எல்லா சிறுபிள்ளைகளாலும் ஓரிடத்தில் அமர்ந்து பூஜை முறைகளை செவ்வனே செய்ய அவர்களுடைய மனம் இசையாது, ஆகையால் சுற்றிக் கொண்டிருக்கும் மனதை நல்வழி படுத்த ஆலயம் சென்று புனித நீராடிய பின்பு அந்த ஆலயத்தை சுற்றி வருவது போல் ஓர் செயல் முறையை சான்றோர்கள் வகுத்தனர்.

இதன் மூலம் தன்னுடைய இந்திரியங்கள் மற்றும் சிதறி கிடக்கும் மனதை தேவையற்ற சிந்தனைகளிலிருந்து திசை திருப்பி இறை உணர்வை உணர்வதற்கு ஒரு படியாக ஆலய வழிபாடு மற்றும் புனித நீராடுதல் என்னும் செயல் முறை சான்றோர்களால் வகுக்கப்பட்ட்து.

ஆனால் பெரும் பாலான மனித மனங்களோ, ஆலய வழிபாடு மற்றும் புனித நீராடுதல் என்னும் செயல்களில் மயங்கி, தன் வாழ்நாள் முழுவதும் ஊர் ஊராக சுற்றி கொண்டிருக்கின்றனர்.

அது மட்டுமல்லாமல், தன்னை சார்ந்தவர்களிடத்தில், நான் இன்ன ஊர் ஆலயங்களுக்கு சென்றிருக்கிறேன், இன்ன நதியில் புனித நீராடியுள்ளேன் என்று அந்த செயல்களால் பெருமிதம் அடைந்து, **நான் நித்தமும் ஆலயம் செல்கிறேன், பக்தி செய்கிறேன்** என்று தவறான புரிதலில் தன் வாழ்நாளை கழிக்கின்றனர், இது அந்த செயல்களுக்கான அகங்காராம் மட்டுமே.

இங்கு கூற வரும் கருத்து **மனதை விசாரிக்காமல் எத்தனை ஆலய வழிபாடு செய்தாலும், எத்தனை முறை புனித நீராடினாலும் இறை உணர்வை உணர இயலாது.**

## <u>மந்திர ஜபம்:</u>

**மனமது செம்மையானல் மந்திரம் தேவையில்லை** என்பது சான்றோர் வாக்கு. ஆனால் இந்த வாசகத்தை தவறாக புரிந்து கொண்ட மனிதனின் மனம், ஒரு மந்திரத்தையோ, நாமத்தையோ பிடித்துக்கொண்டு, வாழ்நாள் முழுவதும் ஜபமாகிய செயலை மட்டுமே செய்து கொண்டு, மனதை விசாரிக்க தயங்குகிறது.

இந்த மந்திரஜப செயலே அவர்களுடைய மனதுக்கு நாளடைவில் ஒரு பெரிய தடையாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள தயாராகயில்லை. நான் இந்த வாழ்நாளில் இத்தனை கோடி முறை, இந்த நாமத்தை ஜபம் செய்துள்ளேன் என்று செயல் அஹங்காரமே விஞ்சுகிறதே தவிர, இந்த ஜபத்தால் நமக்கு ஏற்ப்பட்ட நன்மை யாது? எதற்காக செய்கிறோம் என்ற சிந்தனை இல்லாமல், தவறான புரிதலில் தன் வாழ்நாளை கழிக்கின்றனர்.

சான்றோர்கள் கூறியது, **மனம் செம்மையாக மந்திரம் தேவை என்றில்லை, செம்மையான மனதுக்கு மந்திரம் தேவையில்லை என்றே**. மனதை விசாரிக்காமல், மந்திர ஜபத்தை வெறும் செயலாக மட்டுமே செய்து, அச்செயல் முடிந்த அடுத்த கனம் மனம் தன் இயல்பு நிலைக்கு திரும்பியவுடன் இருமைகளில் (விருப்பு/வெறுப்பு, இன்பம்/துன்பம்) மாட்டிக் கொள்கிறது.

தன்னை சார்ந்தவர்களிடத்தில், நான் இன்ன மந்திர ஜபம் செய்கிறேன், இன்ன உபாஸனை செய்கிறேன், என்று கூறி தவறான புரிதலில் தன் வாழ்நாளை கழிக்கின்றனர். **மனதை விசாரிக்காமல் வெறும் மந்திர ஜபத்தின் மூலம் இறை உணர்வை உணர இயலாது**, என்பதே இங்கு கூற வரும் கருத்து.

**<u>யோகாஸனம்/ப்ராணாயாமம்:</u>**

மனிதர்களில் இன்னும் சிலரோ, யோகாஸனம்/ப்ராணாயாமம் போன்ற செயல்களின் மூலம் மனதை கட்டுப்படுத்த முடியும் என்று எண்ணி தங்களின் வாழ்நாளை செலவிடுகின்றனர்.

இங்கே ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும், யோகாஸனம் மற்றும் ப்ராணாயாமம் என்பவை உடலளவில் செய்ய படுகின்ற செயல் முறைகளே, இச்செயல்கள் தற்காலிகமாக மனதை அமைதி படுத்துமே தவிர நிரந்தர மனஅமைதி என்பது மனவிசாரத்தால் தான் கிட்டும்.

இங்கு கூற வரும் கருத்து நிரந்தர மனம் அமைதி என்பது எந்த சூழ்நிலையிலும் மனதிற்கு இருமைகளற்ற நிலை, உடலளவில் யோகாஸனம் /ப்ராணாயாமம் என்ற செயலை மட்டுமே செய்து கொண்டு, இந்த செயலை எதற்காக தொடங்கினோம் என்று சிந்திக்காமல் தன் வாழ்க்கையில் **நான் நித்தியமும் யோகாஸனம்/ப்ராணாயாமம் செய்கிறேன்** என்ற அஹங்காரத்தில் தவறான புரிதலில் தன் வாழ்நாளை கழிக்கின்றனர்.

**<u>த்யானம்:</u>**

இன்னும் சில மனித மனங்களோ, த்யானம் செய்து இறை உணர்வை தன்னுள் உணருகிறேன் என்று ஒரு தெய்வத்தையோ அல்லது உருவத்தையோ அல்லது அக்ஷரத்தையோ இடைவிடாது த்யானம் செய்கிறேன் என்ற வேறோர் எண்ணத்தில் மாட்டி கொள்கிறார்கள், அதாவது மனதை ஒரு எண்ணத்திலிருந்து வேறோர் எண்ணத்திற்கு திசை திருப்புகிறார்கள், அவ்வளவு தான்.

இங்கு உண்மையான த்யானம் என்பது **இருப்பதெல்லாம் இறைவனே** இதனை புரிந்து கொள்ளாமல், இறைவனை **உள்ளே தேடுகிறேன், வெளியே தேடுகிறேன்** என்று கூறுவதெல்லாம் தன்னுடைய மனதில் உள்ள அறியாமையே.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் **த்யானிப்பவரை த்யானத்தின் மூலம் எவ்வாறு த்யானிக்க முடியும்,** இந்த வாக்கியத்தை சற்றே சிந்தித்து பார்த்தால் இதிலுள்ள ஆழ்ந்த உண்மை விளங்கும்.

உடலளவிலும் மனதளவிலும் த்யானம் என்ற செயலை மட்டுமே செய்து கொண்டு, இந்த செயலை எதற்காக தொடங்கினோம் என்று சிந்திக்காமல் தன் வாழ்க்கையில் **நான் நித்தியமும் த்யானம் செய்கிறேன்** என்ற தவறான புரிதலில் தன் வாழ்நாளை கழிக்கின்றனர், தான் தவறான புரிதலில் உள்ளோம் என்று ஏற்று கொள்ளவும் மறுக்கின்றனர்.  இங்கு கூற வரும் கருத்து, மனதை விசாரிக்காமல் த்யானம் என்பது வேறோர் செயல் மற்றும் எண்ணம் மட்டுமே.

**<u>சாஸ்த்திரங்கள் கற்பது:</u>**

இன்னும் சில மனித மனங்களோ, சாஸ்த்திரங்கள் கற்பதின் மூலம் மனதை மேம்படுத்தி இறை உணர்வை உணரலாமென்று பல ஆண்டுகள் பல விதமான சாஸ்த்திரங்களை நன்றாக கற்று, புறத்திலிருந்து அறிவை சேகரித்து கொண்டு, ஏட்டறிவை மனதில் ஏற்றி வைத்து கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் படித்த சாஸ்த்திரமே அவர்களுக்கு தடையாக இருக்கிறது என்றும் உணர மறுக்கிறார்கள்.

சாஸ்த்திரங்களை படித்துவிட்டோம் என்று எண்ணிக்கொண்டு, தங்களுடைய உடலாலும், மனதாலும் எற்படும் இருமைகளிலிருந்து விடுபட முடியாமல் வெறும் புத்தக அறிவை வைத்துக்கொண்டு எனக்கெல்லாம் தெரியும் என்ற அஹங்காரத்தினால்  தவறான புரிதலில் தன் வாழ்நாளை கழிக்கின்றனர்.

ஆனால் சாஸ்த்திரங்களோ, **இங்கு இருப்பது ஒன்றேயாகிய ஆத்மா, அதுவே தானாகவும் எல்லாமாகவும் இருந்து, இயங்கி கொண்டிருக்கிறது, தன்னை தானே ப்ரகாசித்து விளக்கி கொண்டிருக்கிறது என்று மனதிற்கு தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது**.

இந்த உயர்ந்த கருத்தை சாஸ்த்திரத்தின் வாயிலாக உணர்ந்த மனமே, தன் ஆத்ம சொரூபத்தில் நிலைத்து இருக்கிறது.

இவ்வாறு கூறி நீர்குமிழியை பார்த்து உன் கேள்விக்கான பதில் கிடைத்ததா என்று வினவினார் வழிப்போக்கர்.

**நீர்குமிழி:** ஐயா நன்றாக விளக்கினீர்கள், பூஜை போன்ற வெறும் செயல் மாத்திரத்தால் மட்டும், மனதை கட்ட இயலாது, செயலுடன் கூடிய மனவிசாரத்தால் தான் அது சாத்தியமென்று விளக்கினீர்கள். மேலும் சில கருத்துக்களின் மூலம் சற்று ஆழமாக தெளிவுபடுத்துங்களேன்.

**வழிப்போக்கர்:** சரியாக புரிந்து கொண்டாய் நீர்குமிழி, சான்றோர்கள் மேலே கூறப்பட்ட செயல் வழிகளை (பூஜை போன்றவை) மானிட சமுதாயத்திற்கு இரண்டு பகுதியாக பிரித்தனர்.

<u>முதல் பகுதி:</u>

மனிதன் தன் வாழ்வில், இந்த பருவங்களில் உடலளவிலும், ஆரம்ப நிலை மனதளவிலும் கடக்கிறான்:

**<u>குழந்தை பருவம்</u>** - தன்னுடைய பெயர், அம்மா, அப்பா, ஊர், சொந்தங்கள் போன்ற விஷயங்களை, அக்குழந்தை தன் மனமாகிய சித்தத்தில் சேகரித்து கொள்கிறது. எந்த விஷயத்தை ஆழமாக சேகரித்து கொள்கிறதோ, அதுவே அக்குழந்தையின் வாழ்க்கைக்கு அடித்தலமாக அமைகிறது. இப்பருவத்தில் செயல்களுக்கோ, சுய சிந்தனைகளுக்கோ இடமில்லை என்பது குறிப்பிடதக்கது.

**<u>குமார பருவம்</u>** - இப்பருவத்தில் சமுதயம், கல்வி, இவைகளால் தன்னிடத்தில் மேலும் பல விஷயங்கள் சேகரிக்கப்பட, **நான்** என்ற அஹங்காரமும், **எனது** என்ற மமகாரமும் சேர்ந்து வளர்கிறது, ஆனால் மனமுதிர்ச்சி இல்லாததால் செயல்களினாலேயே பெரும்பாலான மனிதர்களால் இப்பருவமானது வாழ்வில் கடக்கப்படுகிறது.

<u>குறிப்பு:</u> **விதிவிலக்கு என்பது எல்லா பருவங்களிலும் உள்ளது, அது இங்கு எடுத்துக் கொள்ளபடவில்லை, பொதுவான கருத்துக்களே எடுத்து ஆராயப்படுகின்றன.**

**<u>இரண்டாவது பகுதி:</u>**

மனிதன் தன் வாழ்வில், இந்த பருவங்களில் உடலளவிலும், மனதளவிலும் முதிர்ச்சி ஏற்பட்டு தன்வாழ்நாளை கடக்கிறான், இந்த பருவங்களில் தான், மனம் விசார தன்மைக்கு தயாரகிறது, மற்றும் மனிதனுக்கே உரிய ப்ரத்யேக ஆறாம் அறிவு நன்கு பிரகாசிக்கிறது, இந்த அறிவு தெளிவின் மூலம், நாம் ஏன் இந்த செயல்களை செய்ய வேண்டும்? இதற்கான காரணம் என்ன? இதனால் ஆவதென்ன? என்ற சிந்தனை மனிதனுள் மலர வேண்டும்.

**<u>வாலிப பருவம்</u>** - இப்பருவத்தில் மனிதனுக்கு தன்னுடைய குழந்தை மற்றும் பால பருவங்களில் சேகரித்துக்கொண்ட எண்ணங்களெல்லாம் அனுபவமாகின்றன. அவ்வாறு அனுபவமாகும் பொழுது, சற்றே சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

நம் பெற்றோரும், உலகில் உள்ள எல்லோரும் பல நூற்றாண்டுகளாக மேலே கூறப்பட்ட செயல்களை செய்து கொண்டிருந்தார்கள் அல்லது இருக்கிறார்கள். ஆனால் இத்தகைய செயல்களின் மூலம் அவர்களால், மனதின் இருமைகளிலிருந்து விடுபட முடியவில்லை.

அப்படியானால் தானும் அதே செயல்களை செய்வது சரியில்லை என்ற விவேக புத்தியை கையாண்டு, சான்றோர்கள் கூறும் விஷயங்களை, அவர்களை நாடி புரிந்து கொண்டு, மனதினை விசாரம் செய்து, இருமைகளிலிருந்து விடுபட வேண்டும். உடலும், மனமும் நன்றாக தெளிவுடன் இயங்கிக் கொண்டிருக்கும் இப்பருவம் மிகவும் முக்கியமான பருவமாகும், இதையே சான்றோர்கள் **பருவத்தே பயிர் செய்** என்று கூறியுள்ளனர்.

ஆனால் பெரும்பாலானோர், இந்த பருவத்தை உடலை போஷிப்பதிலும், தேவைக்கு மேல் பொருளை சேர்ப்பதிலும், மேலே கூறபட்ட பூஜை போன்ற செயல்களை செய்தும், மனதை விசாரம் செய்யாமல் இந்த முக்கியமான பருவத்தை கழிக்கின்றனர்.

**<u>முதுமை பருவம்</u>** - மனிதன் தன்னுடைய முந்தய (குழந்தை/பால/வாலிப) பருவங்களில் தான் சேகரித்துக் கொண்ட தொகுப்புகளை அசை போடுவதே இப்பருவம். ஏனெனில் இப்பருவத்தில் மனிதனுடைய உடல் தளர, செயல்களின் வீரியம் குறைய, மனம் மட்டும் சதா இயங்கிக் கொண்டே இருக்கும் (பொதுவாக கடந்த காலத்தை நினைத்து ஏங்கும் அல்லது எதிர்காலத்தை நினைத்து பயம் கொள்ளும்).

ஆனால் விசாரம் செய்யப்பட்ட மனமோ, உடல் என்பது தளர கூடியது என்ற உண்மையை உணர்ந்து, அதனை பற்றி கவலைப்படாது, கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளற்று, தன் ஆத்ம சொரூபத்திலேயே நிலைத்திருக்கும். இருமைகளால் பாதிப்பை அடைவதில்லை.

**குறிப்பு: விதிவிலக்கு என்பது எல்லா பருவங்களிலும் உள்ளது, அது இங்கு எடுத்துக்கொள்ள படவில்லை, பொதுவான கருத்துக்களே எடுத்து ஆராயப்படுகின்றன.**

இவ்வாறு கூறி நீர்குமிழியை பார்த்து உன்னுடைய சந்தேகங்கள் தெளிந்ததா என்று வினவினார்.

**நீர்குமிழி:** ஐயா, மனிதனுக்கு மனவிசாரம் எவ்வாறு முக்கியம் என்பதை நன்றாக விளக்கினீர்கள். மனவிசாரம் எப்படி செய்ய வேண்டும் என்பதை சற்று கூறுங்களேன்?

**வழிப்போக்கர்:** நல்லது இப்பொழுது நீ விஷயத்துக்கு வந்துவிட்டாய், கூறுகிறேன் கேள். நாம் இங்கு ஒரு உதாரணத்தை வைத்துப் பார்ப்போம்:

ஒரு மனிதன் மிதிவண்டியை பழக கற்றுக் கொள்கிறான் என்று வைத்து கொள்ளலாம். ஒன்றேயாகிய ஆத்மா, சக்தி(உபாதி)யாகிய உடல் மற்றும் மனம் வாயிலாக இச்செயலை நிகழ்த்துகிறது. அது எவ்வாறெனில்:

**மிதிவண்டி** - அறிவு பரிமாணமில்லாதது, உலோகம் என்ற உபாதிகளின் மூலம் ஆத்மாவாகிய உணர்வு தன்னை வெளிபடுத்துகிறது.

**மனிதன்** - உடல் மற்றும் ப்ரத்யேக ஆறாம் அறிவாகிய மனதின் மூலம் ஆத்மாவாகிய உணர்வு தன்னை வெளிபடுத்துகிறது.

இங்கு புரிந்து கொள்ள வேண்டியது, மனிதனின் உபாதி (உடல்+மனம்) வாயிலாகவும் மற்றும் மிதிவண்டி உபாதி வாயிலாகவும், ஒன்றேயாகிய ஆத்மா சாக்ஷியாக இருந்து கொண்டு மிதிவண்டியை பழகுதல் என்ற செயலை (படைப்பை) நிகழ்த்திக் கொள்கிறது.

இதில் மனிதன், உடல் மற்றும் மனதின் செயல்களை **தா(நா)ன்** செய்கிறேன் என்று எண்ணி, தன்னால் தான் மிதிவண்டி பழகப்படுகிறது என்று நினைப்பது அவனுடைய அஞ்ஞானத்தை காட்டுகிறது.

இவ்வாறு மனிதன் எல்லா செயல்களிலும் **நான் செய்கிறேன்**, **நான் செய்கிறேன்** என்று தன்னை உடலாகவும், மனதாகவும் நினைத்து, அந்த செயலினால் வரும் வினைகளில் மாட்டிக் கொண்டு சம்சாரத்தில் (பிறப்பு/இறப்பு) உழல்கிறான்.

ஏனெனில் **சிவமில்லையேல் சக்தியில்லை**, இங்கு சிவம் என்பது ஆத்மா(உணர்வு), சக்தி என்பது ஆத்மாவாகிய சிவத்தை உணர பயன்படும் கருவி மட்டுமே, இக்கருவி இல்லையேல், சிவத்தை உணர இயலாது, இதையே **சக்தியில்லையேல் சிவமில்லை** என்று கூறுகின்றனர். இந்த வாக்கியத்தை ஆழ்ந்து சிந்தித்தால் சிவதிற்கும் சக்திக்கும் உள்ள வேறுபாடும் மற்றும் ஒற்றுமையும் நன்றாக புலப்படும்.

இந்த படைப்பு முழுவதும் **சக்தி(உபாதி)யின் லீலை**, ஆத்மா இந்த லீலைக்கு சாக்ஷியாகவே இருக்கிறது. இதனையே பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் **நானில்லாமல் இந்த படைப்பில்லை, ஆனால் இந்த படைப்புகள் நானில்லை** என்கிறார்.

மனிதன் தன்னை ஆத்மாவாக உணர்ந்து, சக்தி(உபாதி)யாகிய உடலும் மனமும் செயலை செய்கிறது, அந்த செயலுக்கு **தா(நா)ன்** வெறும் சாக்ஷியே என்று உணர்ந்த மனமே (இன்பம், துன்பம். நல்வினை, தீவினை, விருப்பு, வெறுப்பு, புண்ணியம், பாவம்) போன்ற இருமைகளிலிருந்து விடுபட்டு மேலான வீடுபேற்றை அடைகின்றது.

நீர்குமிழியே இந்த உதாரணத்தை எந்த ஒரு மனிதன் நன்றாக சிந்தித்து, தன் வாழ்க்கையில் எதிர்க்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் **தன்னை ஆத்மாவாக கருதுகிறானா? அல்லது சக்தி(உபாதி)யாக கருதுகிறானா?** என்ற விசாரத்தையே இங்கு மன(சுய/ஆத்ம)விசாரம் என்றெல்லாம் கூறப்படுகிறது, என்று கூறி நீர்குமிழியை பார்த்தார்.

**நீர்குமிழி:** ஐயா, மனவிசாரத்தை நன்றாக ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கினீர்கள், இந்த உண்மை இவ்வளவு எளிதாக இருந்தும் ஏன் மனிதர்களால் ஏற்று கொள்ளமுடியவில்லை?

**வழிப்போக்கர்:** நன்றாக கேட்டாய் நீர்குமிழி, சொல்கிறேன் கேள். இதற்கு முழு காரணம் மனிதனே! அவனால் தன் மனதில் சேகரித்து கொண்ட தப்பறிவாகிய அறியாமையே இதை புரிந்து கொள்ள பெரும் தடையாக உள்ளது, இதனை உணர்ந்தும் அவைகளை மனிதன் விட தயாராகயில்லை.

மனிதனின் மனம் தன்னாலோ, மற்றவர்களாலோ, தவறான கல்வியினாலோ, சூழ்நிலைகளாலோ பல்வேறு தப்பறிவான அகங்கார மமகாரங்களை தன் மீது ஏற்றி வைத்துள்ளது, அவைகள்:

1. நான் இன்ன குலத்தை சார்ந்தவன்
2. நான் இன்ன ஜாதியை சார்ந்தவன்
3. நான் இன்ன கோத்திரம், சூத்திரத்தை சார்ந்தவன்
4. நான் இன்ன தொழிலை செய்பவன்
5. நான் இன்ன கடவுளை வழிபடுபவன்
6. நான் கடவுள் இல்லை என்ற கோட்பாடுடையவன்
7. நான் இன்ன மதத்தை சார்ந்தவன்
8. நான் இன்ன நாடு/தேசத்தை சார்ந்தவன்
9. நான் படித்தவன், படிக்காதவன்
10. நான் ஏழை, பணக்காரன்
11. நான் உடல், மனம்
12. என்னுடைய தாய், தந்தை, சகோதரர், சகோதரி, மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், பகைவர்கள்.
13. என்னுடைய வீடு, வாகனம், நிலம், பொன், மற்றும் பல...

எப்பொழுது மனிதன் தன்னுடைய மனதை நன்றாக விசாரம் செய்து, மேலே கூறப்பட்ட தப்பறிவி(அறியாமையி)லிருந்து தன் மனதை விடுவித்துக் கொள்கிறானோ, அந்த மனம் இருமைகளிலிருந்து விடுபட்டு, தன் சுயத்தை உணர தயாராகிறது.

மேலும் அறிவு பரிமாணத்தில், மனிதர்களில் நான்கு வகைகள் உண்டு அவை:

**அஞ்ஞானிகள்** - இவர்கள் உடலளவில் தான் மனிதர்கள், மனதளவில் மனிதனுக்கே உரிய ப்ரத்யேக ஆறாம் அறிவை உணராதவர்கள். ஆகையால் இவர்கள் உண்டு, புணர்ந்து, போகத்திற்காக பொருள் சப்பாதிப்பதிலே தன் வாழ்நாளை கழிக்கின்றனர். இவர்களில் ஒரு சிலர் இறைவனை வியாபாரியாகவே கருதுகின்றனர், ஒரு சிலர் இறைவன் என்பது இல்லை என்றும், ஒரு சிலரோ நாம் இறைவனை வணங்கவில்லை என்றால் நமக்கு துன்பம் வரும் என்ற பயத்தில் வணங்குகின்றனர்.

**சிந்திக்ககூடிய மனிதர்கள்** - இவர்கள் உடலளவிலும், மனதளவிலும், மனிதனுக்கே உரிய ப்ரத்யேக ஆறாம் அறிவை உபயோகித்து, இறைவனை உணர மேலே கூறப்பட்ட பல்வேறு பூஜை போன்ற செயல்களை செய்து கொண்டு, மனதை விசாரிக்காமல் தப்பறிவாகிய இருமைகளில் மாட்டி கொண்டு சம்சாரத்தில் உழலுகிறார்கள்.

**சாதகர்கள்** - இவர்கள் உடலளவிலும், மனதளவிலும், மனிதனுக்கே உரிய ப்ரத்யேக ஆறாம் அறிவை உபயோகித்து, இறைவன் தனக்கு வேறானவனில்லை என்பதை நன்கு உணர்ந்து **இருப்பதெல்லாம் இறைவனே** என்ற உண்மையை தன் வாழ்வில் எல்லாவற்றிலும், எல்லா தருணங்களிலும் அனுபவமாக்க முயற்சிக்கிறார்கள்.

**ஞானிகள்** - இவர்களுக்கு இறைவனை தவிர வேறெதுவுமில்லை என்பதை அனுபவமாக உணர்ந்து, உடல் மற்றும் மனம் என்பது சக்தி(உபாதி)யின் வெளிப்பாடு மட்டுமே, **தா(நா)ன்** அதற்கு வெறும் சாக்ஷியே என்று ஞானத்தில் திளைத்து இருக்கின்றனர். தான் மட்டுமே சத்தியம் உலகம் மாயை என்று உணர்ந்தவர்கள்.

ஞானிகளின் மனனிலை, இந்த பாடல் வரிகளில் ஒரு குறிப்புகாக இங்கே கொடுக்கப்படுகிறது:

நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே
நீங்கள் எல்லாம் சொர்ப்பனம் தானோ
பல தோற்ற மயக்கங்களோ
சொர்ப்பனம் தானோ
கற்பதுவே கேட்பதுவே கருதுவதே
நீங்கள் எல்லாம் அர்ப்ப மாயைகளோ
உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ ||1||

வானகமே இளவெய்யிலே மரம்சரிவே
நீங்கள் எல்லாம் கானலின் நீரோ
வெறும் காட்சி பிழைதானோ
போனதெல்லாம் கனவினைபோல்
உடைந்தேழுந்தே போனதனால்
நானும் ஓர் கனவோ
இந்த ஞாலமும் பொய்தானோ ||2||

காலமென்றெ ஒரு நினைவும்
காட்சி என்று பல நினைவும்
கோலமும் பொய்களோ
அங்கு குணங்களும் பொய்களோ
காண்பதெல்லாம் மறையுமென்றால்
மறைந்ததெல்லாம் காண்பதன்றோ
நானும் ஓர் கனவோ
இந்த ஞாலமும் பொய்தானோ ||3|| - **பாரதியார்**

இவ்வாறு கூறி முடித்த வழிப்போக்கர், நீர்குமிழியை பார்த்து, இதுவரை நம்முடைய உரையாடலில் உனக்கு புரிந்ததை கூறு என்றார்.

**நீர்குமிழி:** வாய்பளித்ததற்கு மிக்க நன்றி ஐயா, என் புரிதலை தங்களிடம் பணிவுடன் பகிருகிறேன் கேளுங்கள் என்று கூறி:

மனிதர்கள் என்னை நீர்குமிழி என்ற நாமத்துடன் இந்த ரூபத்தை அழைக்கிறார்கள். ஆனால் **நான்** நாமமற்றவன் ரூபமற்றவன், நீருக்கு வேறானவன் அல்லன் - அதாவது நீரிலேயே தோன்றி, நீர்குமிழியாய் நீரிலேயே இருந்து, இறுதியில் நீரிலேயே உடைந்து நீராய் ஆகிவிடுகிறேன் (வந்து, இருந்து, போகின்றவன்).

**நீர் என்பது சைதன்யம் + உபாதி**
**சைதன்யம் என்பது உணர்வு / ஆத்மா / பிரம்மம் (Consciousness)**
**உபாதி என்பது நீர்மை (Liquid Form)**

நான் பிறப்பதில்லை, உடைவ(இறப்ப)தில்லை, யாராலும் உருவாக்கப்படுவதுமில்லை, பாதுகாக்கப்படுவதுமில்லை, அழிக்கப்படுவதுமில்லை.

நான் ஆத்மா, அனைதிற்கும் சாக்ஷியானவன், அறிவு வடிவினன். நான் அஞ்ஞானமற்றவன், அஞ்ஞானத்தால் ஏற்படும் காரியங்களற்றவன். நான் நிரந்தரமானவன், தூய்மையானவன், வாலறிவன், விடுபட்டவன், தூய இருப்பு.

நான் எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைப்பவன், இரண்டற்றவன்.

நான் எல்லாவற்றிலும் சைதன்யமாக பேதமற்று இருக்கிறேன்.

நான் சத்சிதானந்தம் (இருப்பறிவின்பம்).

**நானே நீங்கள், நீங்களே நான்.**

இதுவே என்னுடைய சகஜ நிலை என்று கூறி, வழிப்போக்கரின் பாதங்களில் பட்டு தன் சுயத்திற்கு திரும்பியது **நீர்குமிழி!!!**

# ஓம் தத் சத்

# பகுதி - 2



பாகம் ஒன்றில், நீர்குமிழி தன்னுடைய சகஜ நிலையை உணர்ந்து வழிபோக்கரின் காலில் விழுந்து தன் சுயத்திற்கு திரும்பியது வரை கண்டோம். அதன் தொடர்ச்சியை பாகம் இரண்டில் காண்போம்.

சில காலங்கள் கழிந்தது, வழிப்போக்கர் இன்று வேறொரு கிராமத்தை அடைந்திருந்தார். இன்றும் ஒரு ஆற்றங்கரை ஓரத்தில் தன்னுடைய நாளை கழிக்க விரும்பி ஆற்றில் நீராட இறங்கினார்.

வழிபோக்கரே நலமா? என்ற குரல் கேட்டது, அட இது நமக்கு பரிட்சியமான குரல் அயிற்றே என்று யோசித்து, யார் நீர்குமிழியா? என்று ஆற்றில் உள்ள நீரின் திசை நோக்கி கேட்டார் வழிப்போக்கர். அதற்கு நீகுமிழி ஆம் என்றது.

**வழிப்போக்கர்:** நான் ஆனந்தமாக உள்ளேன், என் பிரியமான நீர்குமிழி! பார்த்து நாளாயிற்றே, நீ எவ்வாறு உள்ளாய்? என்று வினவினார்.

**நீர்குமிழி:** ஐய்யனே! நாம் பேசியவற்றை எல்லாம் புத்தியில் வைத்து கொண்டு சில நாட்கள் மனதின் விளையாட்டிலிருந்து தப்பித்திருந்தேன், ஆனால் சில நாட்களுக்கு பிறகு மீண்டும் என்னிடம் பயம், கவலை, கோபம், துக்கம், பொறாமை, ஆசை இவையெல்லாம் குடி கொண்டுவிட்டது, ஏன் என்று தெரியவில்லை.

**வழிப்போக்கர்:** ம்ம்ம்ம்ம் என்று தலையசைத்தார்.

**நீர்குமிழி:** ஐயா! ஏன் இவ்வாறு மீண்டும் இவைகள் என்னிடம் ஆதிக்கம் செலுத்துகின்றன, நான் உங்களிடம் **ஆத்மக்ஞான** பாடங்களை கேட்ட மாத்திரத்தில் எல்லாம் முடிந்து விட்டது, நான் ஆத்ம ஞானம் பெற்று என் சுயத்திற்கு திரும்பிவிட்டேன் என்று நினைத்து கொண்டு இருந்தேன் என்றது.

**வழிப்போக்கர்:** ஒரு கற்பனையான தப்பறிவை, எல்லாம் வல்ல மனோசக்தி உன்னிடத்தில் தோன்ற செய்து விட்டது, அது எவ்வாறெனில், **நான் என் சுயதிற்கு திரும்பிவிட்டேன்** என்று கூறி சிரித்தார்!!!!!

**நீர்குமிழி:** ஐயா! என்னுடைய கவலை தங்களுக்கு சிரிப்பாக இருக்கிறதா என்றது?

**வழிப்போக்கர்:** பிரியமான நீர்குமிழி கேள், மனதின் இயல்பே சதா மாறி கொண்டே இருப்பது. அதனால் எல்லா நேரத்திலும் ஒரே மாதிரியாகவோ, ஒரே எண்ணத்திலோ நிலைத்து இருக்க இயலாது. அதனுடைய இயல்பிற்கு மாறாக மனிதனை போல நீயும் மனம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று நினைப்பது உன்னுடைய அறியாமையை காட்டுகிறது என்று தான் சொல்ல வேண்டும். **அன்று உனக்கு ஏற்பட்ட தெளிவு தற்காலிக அறிவு மட்டுமே அது அனுபவ அறிவு இல்லை** என்பதை புரிந்து கொள்.

அனுபவ அறிவு என்பது, வாழ்வில் எந்த சூழ்நிலை ஏற்ப்பட்டாலும், தான் பெற்ற அறிவில் (ஞானத்தில்) நிலைத்து இருந்து, மனதினால் ஏற்படும் இருமைகளால் பாதிப்படையாமல் இருத்தல், இதனையே திடஞானம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**நீர்குமிழி:** ஒரு உதாரணத்துடன் கூறுங்கள் ஐயா.

**வழிப்போக்கர்:** நீர்குமிழி, படைப்பில் ஒவ்வொரு பிறப்பிற்கும் ஒரு நோக்கமுண்டு, அது போலவே, மனதையுடைய மனிதனுடைய பிறப்பிற்கு நோக்கம் ஆத்மாவாகிய **தன் சுயத்தை உணர்தல்**. இதை அறிய மனிதனிடம் கொடுக்கப்பட்ட கருவியே **மனம்**.

அக்கருவியை கொண்டு செய்யப்படும் விசாரமே ***ஆத்ம(சுய/ தத்துவ) விசாரம்*** என்பதாகும். இந்த விசாரத்தை மேற்கொள்ள, மனதை உயர் பரிமாணதிற்கு தயார் செய்ய வேண்டும். ஆனால் மனதின் இயல்போ அவ்வாறில்லை, இந்த மனதின் இயல்பினை படைப்பில் வந்து போன ஒரு கவிஞர் அழகாக விளக்குகிறார்:

மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
ஒன்றையே பற்றி யூச லாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாதுபோய் விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதிய காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய், புதியதை அஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை அணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமை காணோமெனப் பொருமுவாய், சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போல
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததில் இசைவாய். அங்ஙனே,

என்னிடத் தென்றும் மாறுத லில்லா
அன்புகொண் டிருப்பாய், ஆவிகாத் திடுவாய்,
கண்ணினோர் கண்ணாய், காதின் காதாய்ப்
புலன்புலப் படுத்தும் புலனா யென்னை
உலக வுருளையில் ஒட்டுற வகுப்பாய்,
இன்பெலாந் தருவாய், இன்பத்து மயங்குவாய்,
இன்பமே நாடி யெண்ணிலாப் பிழை செய்வாய்,
இன்பங் காத்துத் துன்பமே யழிப்பாய்,
இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்,
தன்னை யறியாய், சகத்தெலாந் தொளைப்பாய்,
தன்பின் னிற்குந் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய், காணெனிற் காணாய்,
சகத்தின் விதிகளைத் தனித்தனி அறிவாய்,
பொதுநிலை அறியாய், பொருளையுங் காணாய்,
மனமெனும் பெண்ணே! வாழிநீ கேளாய்!
நின்னொடு வாழும் நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனை நாட்போல் இனியுநின் னின்பமே
விரும்புவன்; **நின்னை மேம்படுத் திடவே**
**முயற்சிகள் புரிவேன்; முத்தியுந் தேடுவேன்**;
உன்விழிப் படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன் - **பாரதியார்**

இப்பாடலில் **மனதினை மேம்படுத்த முயற்சிகள் புரிந்து, முக்தியை தேடுவேன்** என்று தெள்ளத்தெளிவாக கூறியிருக்கிறார் பாரதியார்.

சான்றோர்கள் இந்த முயற்சிகளை, சாஸ்த்திரங்களை எடுத்துரைக்கும் தக்க குருவின் வாயிலாக **கேட்டல், சிந்தித்தல், தெளிதல் மற்றும் நிலைபெறல்** என்று வகைபடுத்தியுள்ளனர். ஆனால் பொதுவாக, உலகில் மனங்கள் கீழ்கண்ட நிலைகளில் தான் உள்ளது:

பல மனங்கள் சான்றோர்களின் இணக்கம் ஏற்று கொள்ளாது, அவர்கள் கூறும் சாஸ்திரங்களை எடுத்து கொள்ளாது (கேட்காது), இந்த மனங்கள் தன்னுடைய அறியாமையின் காரணத்தினால், மனம் போனபோக்கில் சென்று பிறவி சங்கிலியில் சிக்கி கொள்ளும்.

ஒரு சில மனங்கள், சான்றோர்களின் இணக்கம் கொள்ளும், அவர்கள் கூறும் சாஸ்திரங்களை நன்றாக கேட்கும், ஆனால் சான்றோர்கள் கூறும் கருத்துக்களில் இந்த மனங்களுக்கு முழு நம்பிக்கை இருக்காது, அதற்கு காரணம் தான் சேகரித்து கொண்ட தப்பறிவே, அதனை சரி செய்து கொள்ள தடையாக தானே காரணமாக இருப்பதால், மனம் போனபோக்கில் சென்று பிறவி சங்கிலியில் சிக்கி கொள்ளும்.

ஒரு சில மனங்கள், சான்றோர்களின் இணக்கம் கொள்ளும், அவர்கள் கூறும் சாஸ்திரங்களை நன்றாக கேட்கும், அக்கருத்துக்களில் நம்பிக்கையும் இருக்கும். ஆனால் மனமானது அக்கருத்துக்களை செயல்படுத்தினால் தனக்கும் தன்னை சார்ந்தவர்களுக்கும் எதாவது நேர்ந்து விடுமோ என்ற **பயத்தின்** காரணமாக, அக்கருத்துக்களை சிந்தித்து செயல்படுத்த இயலாத சுழ்நிலைக்கு அந்த மனமே தனக்கு தடையாகிவிடும், இதனால் இப்படிபட்ட மனமும் பிறவி சங்கிலியில் சிக்கி கொள்ளும்.

ஒரு சில மனங்கள், சான்றோர்களின் இணக்கம் கொண்டு, அவர்கள் கூறும் சாஸ்திரங்களில் நம்பிக்கை வைத்து, அக்கருத்துக்களை நன்றாக சிந்தித்து செயல்படுத்தும். அப்படி செயல்படுத்தும் போது, அதில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், அந்த சந்தேகத்தை சான்றோரிடம் சென்று தெளிவு பெறாமல், தனக்கு எல்லாம் தெரியும் என்ற அஹங்காரத்தினால் ஏற்பட்ட தப்பறிவால், அந்த சந்தேகத்திற்கு தானே விடைதேடி கொள்கிறேன் என்று தவறான பாதையில் சென்று காலவிரயம் செய்துவிடும். இப்படிபட்ட மனம் கேட்டும், சிந்தித்தும், தெளிவு பெறாததினால் பிறவி சங்கிலியில் சிக்கி கொள்ளும்.

ஒரு சில மனங்கள், சான்றோர்களின் இணக்கம் கொண்டு, அவர்கள் கூறும் சாஸ்திரங்களில் நம்பிக்கை வைத்து, அக்கருத்துக்களை நன்றாக சிந்தித்து செயல்படுத்தி, அதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு சான்றோரிடம் சென்று **தெளிவு(ஞானத்தை)** பெறும். ஆனால் இந்த மனங்களோ, தான் பெற்ற ஞானத்தை வெறும் ஏட்டு கல்வியாகவே வைத்துகொண்டு, தனக்கு எல்லாம் தெரியும் என்று பிறருக்கு எடுத்துரைத்தும், தன்னுடைய வாழ்வில் எதிர்கொள்ளும் இருமைகளை நீக்க இயலாமல், **ஞானத்தை பெற்றும் அஞ்ஞானியாகவே** வாழ்ந்து பிறவி சங்கிலியில் சிக்கி கொள்ளும்.

வெகு சில மனங்களே, சான்றோர்களின் இணக்கம் கொண்டு, அவர்கள் கூறும் சாஸ்திரங்களில் நம்பிக்கை வைத்து, அக்கருத்துக்களை நன்றாக சிந்தித்து செயல்படுத்தி, அதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு சான்றோரிடம் சென்று **தெளிவு(ஞானத்தை)** பெற்று, தான் பெற்ற ஞானத்தால் வாழ்வில் ஏற்படும் இருமைகளை நீக்கி, எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைத்து. இந்த உடல் நானில்லை, மனம் நானில்லை, வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகள் எல்லாம் ஒரு கற்பனையே என்று **தன்னில், தானாய், தன்மயமாய், தன்சுயமாகிய ஆத்மாவில் நிலைத்திருந்து** இந்த உடலில் இருக்கும் பொழுதே மனதிலுள்ள பந்தங்களிலிருந்து விடுபட்டு **முக்த** நிலையை அடைகிறது. இப்படிபட்ட மனதிற்கே ஸம்ஸாரம் (பிறப்பிறப்பு) என்பதில்லை, இதுவே **ஜீவன்முக்த நிலை** என்று அழைக்கப்டுகிறது.

**நீர்குமிழி:** ஆம் ஐயா, சரியாக கூறினீர்கள். நானும் இதற்குமுன் தாங்கள் கூறியவற்றை நன்றாக கேட்டேனே தவிர அதை பற்றி சற்றும் சிந்திக்கவில்லை, தெளிவும் பெறவில்லை. அதனால் மனதின் ஆதிக்கத்தில் மீண்டும் பீடிக்கப்பட்டேன், இதற்கு எதேனும் உபாயம் உண்டா?

**வழிப்போக்கர்:** அன்பே, இதற்கு ஒரே வழி நல்லார் இணக்கம் அல்லது சான்றோர்(சத்)சங்கம், இதனை பஜ கோவிந்தத்தில்:

ஸத் ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சல தத்வம்
நிஸ்சல தத்வே ஜீவன் முக்தி: - **ஆதிசங்கரர்**

**<u>பொருள்:</u>**

சான்றோர்களின் இணக்கம், மனதிற்கு பற்றற்ற தன்மை அளிக்கும். மனம் பற்றற்ற தன்மை அடைந்தால், அதனிடம் மயக்கங்கள் இல்லாமல் போகும். மனமயக்கம் இல்லாது போனால், என்றும் நிலையான மெய்பொருளை உணரும். நிலையான மெய்பொருளை உணர்ந்த மாத்திரத்தில், இங்கேயே இப்பொழுதே முக்தி.

**நீர்குமிழி:** ஐயா, அப்படியானால் சான்றோரின் இணக்கம் மட்டுமே ஒருவருக்கு வீடுபேற்றை அளித்திடுமா?

**வழிப்போக்கர்:** நீர்குமிழி, வெறும் இணக்கம் மட்டும் பயன் தராது, நன்றாக கேள்.

- **கேட்டல்** - சான்றோர்களின் உபதேசங்களை கவனமாக ஒரு முகத்துடன் ஒன்றுக்கு பல முறை, பல சாஸ்திரங்களின் வாயிலாக கேட்பது.
- **சிந்தித்தல்** - சான்றோர் கூறிய உபதேசங்களை நன்றாக ஆழ்ந்து சிந்திப்பது, அவற்றை அன்றாட வாழ்க்கையில் பின்பற்றுவது, எத்தனை சவால்கள் வந்தாலும் மனம் கலங்காமல் உபதேசங்களை பின்பற்ற வேண்டும்.
- **தெளிதல்** - உபதேசங்களை பின்பற்றி, சந்தேகங்கள் எழுமின் மீண்டும் சான்றோர்களிடம் கேட்டு மனதை தெளிவு ஏற்படுத்த வேண்டும்.
- **நிலைபெறல்** - மனம் தெளிவு பெற்ற விஷயங்களை கொண்டு, வாழ்வில் நிலைபெறல் வேண்டும்.

**குறிப்பு:** மனம் தெளிவு பெறும் வரை கண்டிப்பாக, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் மற்றும் நிலைபெறல் முறைகளை பின்பற்ற வேண்டும். ஏனெனில் இந்த மனம் ஜீவத்துவத்தால் (நிறைவேறாத ஆசைகளால்) பல சரிரங்களை எடுத்து அஞ்ஞானத்தால் பல வகையான தப்பறிவை சேர்த்து கொண்டுள்ளது, அவைகளை மனவிசாரத்தின் மூலம் நீக்கி, உண்மையறிவை வாழ்வில் செயல்படுத்தி, மனமானது இருமைகளிலிருந்து விடுபடும் வரை இம்முறைகளை செயல்படுத்த வேண்டும்.

எவ்வாறு தப்பறிவை சேகரித்து கொள்ள மனம் காலம் எடுத்து கொண்டதோ, அவ்வாறே சேகரித்த தப்பறிவை நீக்குவதற்கும் மனதிற்கு கால அவகாசம் தேவைபடும். இதற்கு மனதிடம், பொறுமை, விழிப்பாற்றல் மிகவும் அவசியமாகும். வாழ்வில் ஒவ்வொரு தருணத்திலும் விசாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும். ஒரு சில மனங்களோ, எதோ ஒரிரு முறை கேட்டுவிட்டு, எனக்கு எல்லாம் புரிந்து விட்டது என்ற தப்பறிவினால் தடம்மாற கூடும். இதனையே

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. - **திருவள்ளுவர்**

**நீர்குமிழி:** ஐயா, எனக்கு ஒரு சந்தேகம், இவ்வாறு கேட்டு, சிந்தித்த பிறகும் ஏன் மனம் மீண்டும் ஆதிக்கம் செலுத்துகிறது?

**வழிப்போக்கர்:** நீர்குமிழி, ஒருவருடைய கல்வி, வாழ்க்கை முறை, வாழ்க்கை சூழல் மற்றும் எவ்வளவு காலம் அந்த மனம் அவ்வாழ்க்கை முறை(சூழலில்) வாழ்ந்து இருக்கிறது என்பதை பொறுத்தே மனதிற்கு தெளிவு அல்லது உயர் பரிமானம் ஏற்படும். அதனால் தான் **பருவத்தே பயிர் செய்** என்று சான்றோர்கள் கூறினர்.

உதாரணமாக, புதிதாக உள்ள ஒரு காலி பலகையில் எழுதும் பொழுது எழுத்துக்கள் நன்றாக தெரியும், அதே பலகை பலமுறை எழுதபட்டிருந்தால், எற்கனவே எழுதபட்ட எழுத்துக்களின் அச்சுக்கள் பலகையின் தெளிவை குறைப்பது போல, மனதில் ஏற்றி வைக்கபட்ட தப்பறிவானது, தான் நினைப்பதை சரி என்று, தனக்கே உரிய அகங்காரத்தினால் சான்றோர்களின் கருத்துகளை ஏற்க மறுக்கிறது.

**நீர்குமிழி:** ஐயா, ஒருவர் எவ்வாறு சான்றோரை அடையாளம் கொள்ள வேண்டும்?

**வழிப்போக்கர்:** நீர்குமிழி, சான்றோரை அடையாளம் கொள்வதில் மிகவும் கவனமாய் இருக்கவேண்டும், அது எப்படியெனில், வைர கல்லும், கண்ணாடி கல்லும் போல. இரண்டும் பார்ப்பதற்கு ஒன்றை போல தான் இருக்கும், ஆனால் வைரத்தின் மதிப்பு கண்ணாடிக்கு இல்லை என்பது உலகம் அறிந்ததே. இதனை திருமந்திரத்தில்:

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடும் குருடும் குருட்டு ஆட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழும் ஆறே. - **திருமூலர்**

**<u>பொருள்:</u>**

உண்மை உணர்ச்சியில்லார், அகக்கண் குருடாகிய அறியாமையினை நீக்கும் மெய்குருவினை கைக்கொள்ளார். அறியாமையை அகற்றும் நெறியே தெரியாத பொய் குருவினை மெய் எனக் கொள்வர். அங்கனங் கொள்ளுவதால், வழிகாட்ட தெரியாத குருடுங், குருடுங் கூடி குருட்டு ஆட்டம் கொண்டு குழியில் விழுவதுபோன்று, அகக்கண் இல்லாத பொய் குருவினை கொண்டு கருக்குழியில் வீழ்வர்.

ஆதிசங்கரர் விவேகசூடாமணியில், உத்தம சான்றோரது அடையாளங்களை கீழ்கண்டவாறு விவரிக்கிறார்:

- அவர் ஒரு சான்றோரின் மாணவர் இருத்தல் (தனக்கு தானே குரு என்று கூறாதவர்).
- சாஸ்திரங்களின் வழிபடி தன்னை நாடி வருபவருக்கு உபதேசம் செய்பவர்.
- தன்னை நாடி வருபவர்கள் ஏற்று கொண்ட வாழ்விலிருந்தே, மனபக்குவத்தை போதித்து, சந்தேங்களை களைந்து, தெளிவு பெற உதவுபவர்.
- தன்னை நாடி வருபவர்களிடம் எந்தவித எதிர் பார்ப்பும் இல்லாமல் ஆத்ம விசாரத்தை போதிப்பவர்.
- தன்னை நாடி வருபவர்களின் தவறை சுட்டி காட்டுபவர்.
- தன்னை போல் பிறரை நினைப்பவர்.
- தான் எல்லோருக்கும் எடுத்துகாட்டாக வாழ்பவர்.

இப்படிப்பட்ட சான்றோரின் இணக்கம், அவரை நாடி வருபவர்களையும் சான்றோனாக்கும் என்று கூறி நீர்குமிழியை பார்த்தார்.

**நீர்குமிழி:** ஆஹா, என்னே சான்றோர்களது உயரிய பண்பு.

**வழிப்போக்கர்:** ம்ம்ம்ம்ம்ம்...

**நீர்குமிழி:** ஐயா, ஞானத்தை அடைந்த (மனம் தெளிவுற்ற) பிறகு, உடல் மற்றும் மனம் எவ்வாறு இயங்கும்?

**வழிப்போக்கர்:** நல்ல கேள்வி நீர்குமிழி, நன்கு விசாரிக்கபட்ட மனம் தனது சுயதிற்கு திரும்பி, தன்னை ஆத்மாவாக உணர்ந்த பிறகும் **உடலும், மனமும்** இருக்கவே செய்யும்.

அது எவ்வாறெனின் எப்படி மணியினோசை நின்ற பிறகும், அதனுடைய எதிரொலியானது காதில் ஒலித்து கொண்டே இருக்குமோ? அதை போல். இன்னும் சொல்ல போனால் தெளிவடைந்த மனதிற்கு வைக்கபடும் பரிட்சை என்றும் அதனை சொல்லலாம். அதாவது இங்கு கூறவரும் கருத்து என்னவென்றால், ஞானத்தை பெற்ற மனம், இந்த உடலோடு இருக்கும் பொழுது எவ்வாறு அந்த ஞானத்தை கையாளபோகிறது என்பதே அது.

**பெற்ற ஞானத்தை வெறும் ஏட்டு கல்வியாகவே வைத்துகொண்டு, தனக்கு எல்லாம் தெரியும் என்றும், பிறருக்கு எடுத்துரைத்து கொண்டும், தன்னுடைய வாழ்வில் எதிர்கொள்ளும் இருமைகளை நீக்க இயலாமல், மனமானது தன்னிலே சிக்கி தவிக்க போகிறதா?**

அல்லது

**பெற்ற ஞானத்தை கொண்டு, வாழ்வில் ஏற்படும் இருமைகளை நீக்கி, எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைத்து. இந்த உடல் நானில்லை, மனம் நானில்லை, வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகள் எல்லாம் ஒரு கற்பனையே!!! என்று (தன்னில், தானாய், தன்மயமாய், தன்சுயமாகிய ஆத்மாவில் நிலைத்திருந்து), இந்த உடலில் இருக்கும் பொழுதே மனதிலுள்ள பந்தங்களிலிருந்து விடுபட்டு முக்த நிலையை இங்கேயே உணரபோகிறதா?**

என்பதே அப்பரிட்சை.

**நீர்குமிழி:** அப்படிபட்ட ஆத்ம ஞானியின் வாழ்கை எவ்வாறு இருக்கும் ஐயா?

**வழிப்போக்கர்:** அவர்களும் எல்லோரையும் போல் சொல்ல போனால் எல்லோரையும் விட எளிமையாக வாழ்வார் நீர்குமிழி, ஏனெனில் அவர்களுக்கு தேவைகள் என்பது குறைவு.

அதாவது, உடலை போஷிக்க வேண்டும் என்பதற்காக, செயல்களை செய்து, செல்வத்தை ஈட்ட வேண்டும் என்றோ அல்லது சேமித்து வைக்க வேண்டும் என்றோ அவருக்கு அவசியமில்லை. மேலும் ஞானத்தை உணர்ந்துவிட்டோம் என்று உடலை மாய்த்து கொள்ளவோ அல்லது பாதுகாக்காமல் இருக்கவோ இயலாது.

ஆகையால் இந்த உடல் இருக்கும் வரை பிச்சை எடுக்காமல், திருடாமல், பொய் சொல்லாமல், பேராசை படாமல், தர்மமான வழியில் பொருளை ஈட்டி, தனது வாழ்வை நடத்துவார்கள்.

- **உண்ண உணவு** - உடலை பாதுகாக்க உணவே தவிர ருசிக்கு அல்ல. மேலும் உடலிற்கே உணவு தவிர ஆத்மாவாற்கு அல்ல என்ற புரிதலுடன் இருப்பார்.

- **உடுக்க உடை** - மானத்தை மறைப்பதற்கே உடை தவிர ஆடம்பரதிற்கு அல்ல. மேலும் உடலுக்கே உடை தவிர ஆத்மாவாற்கு அல்ல என்ற புரிதலுடன் இருப்பார்.

• **இருக்க இடம்** - இந்த உடலை வெயில், மழை, பணி, குளிர் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளவே இவ்விடம் என்ற புரிதலுடன் இருப்பார். அவ்விடத்தை தனக்கு சொந்தமானது என்றும் கருதமாட்டார். ஒரு வேளை சொந்தமாக இடம் இருந்தாலும், அது தன்னுடைய இடம் என்ற மமகாரமற்று, பற்றற்று இருப்பார். ஏனெனில் இந்த உடலே அநித்தியம் என்ற உண்மை விளங்கின மனதிற்கு இடத்தில் எவ்வாறு பற்றிருக்க முடியும்?

இவ்வாறு தெளிவு பெற்ற மனதிற்கு தேவைகள் குறைந்துவிடும். உடலிற்கே எதுவும் தேவையில்லா பொழுது, மனதிற்கு தேவைபடுவது என்ன இருக்க போகிறது?

தான் பெற்ற ஞானத்தை தன்னிலே அனுபவித்து கொண்டு மௌனமாக ஆனந்தமாக **தான்** இருக்குமிடத்தில் இருப்பார் அல்லது மனிதகுலம் உய்ய **ஆன்மவியல்** பாடங்களை எடுப்பார் அல்லது **புத்தகங்களை படைப்பார்** அல்லது ஆலயங்களுக்கு சென்று **மௌனமாக இருப்பார்** (பொதுவாக மனங்களின் சங்கத்திலிருந்து விலகியிருந்து தன்சுயத்தில் இருப்பதை விரும்புவார்). இந்த உடல் மற்றும் மனமாகிய **சக்தி** தன்மையை நற்செயலுக்காகவே பயன்படுத்துவார்.

**நீர்குமிழி:** ஐயா, ஆத்ம ஞானிக்கு முக்காலமும் தெரியும் என்கிறார்களே அது உண்மையா?

**வழிப்போக்கர்:** தன்னை ஆத்மாவாக உணர்ந்திருக்கும் ஞானிக்கு, காலம் என்பது கிடையாது. காலம் என்பது மனிதனின் மனதால் உருவாக்கப்ட்ட ஒரு கணிதமே தவிர அதற்கு இருப்பு என்பதில்லை, ஏனெனில் காலம் என்பது மாயை. **தன் இருப்பிலே இருகின்றவர், இருப்பில்லாததை எவ்வாறு இருப்பாக எண்ணுவார்**. அதாவது முக்காலமும் உணர்ந்தவர் என்பது என்னவென்றால், மூன்று கலமும் வெறும் கற்பனையே என்று உணர்ந்தவர் என்பதே அதற்கு அர்த்தம்.

ஆனால் அவசியம் ஏற்பட்டால் ஞானி, ஆத்மாவாகிய தன் நிலையிலிருந்து, சக்தி மயமாகிய (உடல் மற்றும் மனம்) நிலைக்கு இறங்கி, மனதின் துணைகொண்டு கடந்த காலம் மற்றும் எதிர் காலங்களை கையாளலாம்.

<u>குறிப்பு:</u> இந்த சித்து வேலைகள் அனைத்தும் உடலினாலும், மனதினாலும் செய்யப்படும் ஒரு மாய விளையாட்டு மட்டுமே, சித்து விளையாட்டிற்கும் ஆத்மாவிற்கும் எந்த சம்பந்தமுமில்லை, ஆத்மா வெறும் சாக்ஷிமாத்திரமே என்று தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

சித்து விளையாட்டால் மனம் மயங்கியவர்கள், மீண்டும் மனதின் ஆதிக்கத்தில் பீடிக்கப்பட்டு தன்னுடைய சுயத்திலிருந்து நழுவுவர். இதற்கு உதாரணம் புராண கதையில், **விஸ்வாமித்ர மஹரிஷி திரிசங்கு மஹாராஜாவிற்காக ஒரு சொர்கத்தை படைக்கிறேன் என்று தனது நீண்ட கால தபோ வலிமையை இழந்தார் என்றும், மீண்டும் கடுந்தவம் புரிந்து தனது தபோ வலிமையை திரும்ப பெற்றார்** என்றும் கூறக்கேட்டுள்ளோம்.

ஆகையால் உடலாலும், மனதாலும் **நான் செய்கிறேன்** என்று எதை செய்தாலும், அது வெறும் செயல்களே (அது ஞானியாக இருந்தாலும் சரி அல்லது அஞ்ஞானியாக இருந்தாலும் சரி), அந்த செயலிற்கான எதிர்வினையை எதிர்கொண்டே ஆகவேண்டும்.

**நீர்குமிழி:** ஆத்ம ஞானி புரிவதற்கு எதேனும் செயல்களுண்டா? ஐயா

**வழிப்போக்கர்:** செயல்கள் அனைத்தும் சக்தியாகிய உடலுக்கும், மனதிற்கும் மட்டுமே. தன்னை அறிவாக உணர்ந்து கொண்ட ஞானிக்கு செயல்களில்லை, அவர்கள் செய்யும் எல்லா செயல்களும் ஈஸ்வர சங்கல்பமாகும். இதனையே கைவல்ய நவநீதத்தில்:

பேத கன்மத்தால் வந்த பிரார்த்த நாநா ஆகும்
ஆதலால் விவகாரங்கள் அவர் அவர்க்கு ஆவவாகும்
மாதவம் செயினும் செய்வர் வாணிபம் செயினும் செய்வார்
பூதலம் புரப்பார் ஐயம் புகுந்து உண்பார் சீவன்முத்தர் - **ஸ்ரீ தாண்டவராயர்**

**பொருள்:**

உடல் நான், மனம் நான் என்ற அஞ்ஞானத்தினாலும், பேதத்தினாலும் செய்யப்பட்ட செயல்களே வினைகளாகும் (முன்வினை, நடவினை, வருவினை). அவ்வினைகளே அவரவர் ஆவாவிற்கு ஏற்றவாறு பலவித நிகழ்வாய் அமைகிறது (இது ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் பொருந்தும்).

மனமனாது எந்த வாழ்க்கை சூழ்நிலையிலிருந்து கொண்டு **தன்னை உணர பெற்றதோ**, அவ்வாழ்கை சூழ்நிலையில் இருந்து கொண்டே பொதுவாக நடவினையை கழித்துவிட்டு தன்னுடைய சுயத்திற்கு திரும்பிவிடும். அது எவ்வாறெனில்:

- தவத்தில் ஈடுபட்டு தன்னை உணர்ந்த மனம், அதிலே முழுமையாக தன்னை அர்பணித்து வினையை முடித்துவிடும்.

- இல்லற தர்மத்தை ஏற்று கொண்டு தன்னை உணர்ந்த மனம், அவ்வாழ்வியலில் இருந்து கொண்டு, தர்மமான வழியில் பொருள் ஈட்டி, சமுதாயத்திற்கு முடிந்தவரை இயன்ற நற்செயல்கள் செய்து வினையை முடித்துவிடும்.

- ராஜ்ஜிய தர்மத்தை ஏற்று கொண்டு தன்னை உணர்ந்த மனம், நாட்டை ஆண்டு கொண்டு, மக்களுக்கு நல்லாட்சி அமைத்து, தர்மத்தை போதித்து, சமுதாயத்திற்கு முடிந்தவரை தன்னால் இயன்ற நற்செயல்கள் செய்து வினையை முடித்துவிடும்.

- வீட்டை விட்டு வெளியேறி துறவு வாழிவை ஏற்று, தன்னை உணர்ந்த மனம், உடலை பாதுகாத்து கொள்ள ஐயமிட்டு உண்டு தன் வினையை முடித்து விடும். இதனையே பஜகோவிந்தத்தில்:

யோகரதோ வா போகரதோ வா
ஸங்கரதோ வா ஸங்கவிஹீனஃ |
யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம்
நந்ததி நந்ததி நந்தத்யேவ ||- **ஸ்ரீ ஆதி சங்கரர்**

**<u>பொருள்:</u>**

யோக வாழ்கையில் இருந்தாலும் சரி, இல்லற வாழ்கையில் இருந்தாலும் சரி, ஸங்கமுற்றவராக இருந்தாலும் சரி, ஸங்கமற்றவராக இருந்தாலும் சரி, யாருடைய மனம் **தன்னில் (பிரம்மத்தில்)** நிலைத்திருக்கிறதோ!!! அந்த மனதிற்கே ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம் மட்டுமே!!!

**நீர்குமிழி:** அதென்ன ஈஸ்வர சங்கல்பம் ஐயா?

**வழிப்போக்கர்:** ஆத்ம ஞானியின் உடல் மற்றும் மனம் செயல்களில் ஈடுபடாத போது, அவர் ஆத்மாவாகிய (தன்) சுயத்தில் நிலைத்திருக்கிறார். ஜீவதன்மை என்ற தன்னுணர்வு சிறிதுமில்லாமல், அதாவது உடல் மற்றும் மனமோடு இருந்தாலும் **சுத்த சைதன்யமாகவே** இருக்கிறார்.

அவருடைய உடல் மற்றும் மனம் விவகாரங்களில் செயலாற்றும் போது, ஈஸ்வர தன்மைக்குள் இந்த உடலையும், மனதையும் சேர்த்துவிடுகிறார்.

அப்போது இந்த உடலும், மனதும் செய்கின்ற செயல்கள் அனைத்தும் ஈஸ்வர செயல்களா(சங்கல்பமா)கின்றன. அந்த செயல்களுக்கு ஆத்மாவாகிய **தான்** வெறும் சாட்சி மாத்திரமாகவே இருக்கிறார். அதனால் செயல்களினால் ஏற்படும் வினைகள் (முன்வினை, நடவினை, வருவினை) அவரை சேர்வதில்லை.

| **படைப்பு** | **செயல்பாடு** | **உபாதி** | | **சைதன்யம்** |
|---|---|---|---|---|
| **ஜீவன் (அறிவை வெளிபடுத்த கூடியவை)** | தனித்தன்மை | உடல் | மனம் | அறி(உணர்)வு |
| **ஜடம் (அறிவை வெளிபடுத்த முடியாதவை)** | ---- | உபாதி | ---- | அறி(உணர்)வு |
| **ஈஸ்வரன் (ஜீவன் மற்றும் ஜடம்)** | ஜகத் | உடல்/உபாதி | மனம்/--- | அறி(உணர்)வு |

அறிவை வெளிபடுத்த கூடியவை - சைதன்யத்தின் துணை கொண்டு மாயா சக்தியாகிய ஈஸ்வரன் அந்தந்த உபாதிகளின் வாயிலாக **தன்னுடைய இருப்பை அறிவாக** வெளிபடுத்துகிறது.

1.ஓரறிவு - தாவரங்கள் (செடி, கொடி, மரம்….)
2.ஈரறிவு - புலு, பூச்சிகள்…..
3.மூன்றறிவு - பல்லி, பாம்பு, தவளை, ஓனான்….
4.நான்கறிவு - பறவைகள்
5.ஐந்தறிவு - விலங்குகள்
6.ஆறறிவு - மனம் கொண்ட மனிதன்

அறிவை வெளிபடுத்த முடியாதவை - சைதன்யத்தின் துணை கொண்டு மாயா சக்தியாகிய ஈஸ்வரன் அந்தந்த உபாதிகளின் வாயிலாக **தன்னை இருப்பாக இருந்து** வெளிபடுத்துகிறது.

1. கல், மண், சவம்
2. பஞ்ச பூதங்கள்
3. நட்சத்திரகள்
4. பால் வெளி மண்டலங்கள்

உபாதியாகிய சக்திதான் வேறுபடுகிறதே தவிர ஒன்றேயாகிய **இருப்பில்** ஞானி **தன்னில்** நிலைத்திருக்கிறார். இதனை உணர்ந்த கவிஞர் பாடுகிறார்:

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்,
ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்;
ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்குமுதற்சோதி நான் - **பாரதியார்**

<u>**பொருள்:**</u>

இந்த **உடல் நான்** மற்றும் **மனம் நான்** என்பது பொய், இந்த பொய்யை நடத்துபவன் நானே !!! ஞானமாகிய தூய வெட்டவெளியில் ஒளிர்பவன் நானே!!! படைப்பனைத்திலும் (அறிவை வெளிபடுத்த கூடியவை மற்றும் அறிவை வெளிபடுத்த முடியாதவை) இருப்பது ஒன்றேயாகிய நானே !!! தன்னை அறிவாகவே விளங்கி கொண்டிருக்கும் முதற் பிரகாசமே நான் !!!

**நீர்குமிழி:** ஐயா, அப்படியானால் ஞானி ஞானமற்றவர்களை எப்படி பார்ப்பார்?

**வழிப்போக்கர்:** ஆத்ம ஞானிக்கு ஞானமுள்ளவர் மற்றும் ஞானமற்றவர்கள் என்ற பாகுபாடில்லை, ஏனெனில் அவருக்கு அந்தந்த உடல் மனங்களை நீக்கினால் இருப்பது ஒன்றேயாகிய **தா(நா)ன்** மட்டுமே என்ற ஞானத்தில் நிலைத்திருப்பதால், அவரின் பார்வை எல்லோரிடத்திலும் சமமாகவே இருக்கும்.

**நீர்குமிழி:** ஐயா, ஞானி ஞானமற்றவர்களின் செயல்களை எப்படி பார்ப்பார்?

**வழிப்போக்கர்:** உதரணத்திற்கு, ஒரு மனிதன் நாய் வளர்கிறார் என்று வைத்து கொள்வோம், அது தன்னுடைய அன்பை அல்லது கோபத்தை எவ்வாறு அவரிடம் வெளிபடுத்தும்?

**நீர்குமிழி:** ஐயா, அந்நாய் தன்னை வளர்த்த மனிதன் மீது கட்டி புறண்டும், நக்கியும் தன் அன்பை வெளிப்படுத்தும். அதே போல கோபம் வந்தால் அவரை பார்த்து குறைத்தும், கடித்தும் வெளிப்படுத்தும்.

**வழிப்போக்கர்:** ஏன் இவ்வாறு நாய் இப்படி செய்கிறது என்று அந்த நாயை வளர்பவர் சற்றும் சிந்திக்கமாட்டார், ஏனெனில் அது தான் நாயின் சுபாவம் என்று அவருக்கு தெரியும். அது போலவே ஞானமில்லா மனிதர்கள், மனம் போன போக்கில் செயல்களை செய்து கொண்டிருப்பார்கள்.

தன்னுடைய மனதிற்கு பிடித்த காரியம் நிகழும்போது இன்புறுகிறார்கள், அதுவே மனதிற்கு பிடிக்காத காரியம் நிகழும்போது துன்புறுகிறார்கள். இவ்வாறு மனதின் அடிப்படையில் செய்யபடும் செயல்களை ஞானி பொருட்படுத்துவதில்லை, ஏனெனில் அது வெறும் சக்தியின் செயல்பாடு மட்டுமே.

**நீர்குமிழி:** ஐயா, மனிதன் இன்பமாக இருக்க வேண்டும் என்று நினைத்து பல செயல்களை செய்து ஏன் துன்பத்தில் உழலுகிறான்?

**வழிப்போக்கர்:** ப்ரிய நீர்குமிழி, **எப்போது மனிதன் எளிமையான வாழ்வியலை ஏழ்மையான வாழ்வியில் என்று நினைத்தானோ**, அப்பொழுதே அவன் துன்ப படுகுழியில் விழுந்துவிட்டான்.

**நீர்குமிழி:** எளிமைக்கும், ஏழ்மைக்கும் என் ஐயா வித்தியாசம்?

**வழிப்போக்கர்:** அது மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம், கூறுகிறேன் கேள்.

**<u>எளிமையான வாழ்வியல்/மனம் என்பது:</u>**

- தேவைக்கு மீறி ஆசைபடாமல் இருப்பது போதும், என்ற நிறைவுற்ற மனம் (தனக்கு கிடைத்ததை வைத்து நிறைவாக/கவலைபடாமல் வாழ்வது, மகிழ்ச்சியாக உடலை விட்டு பிரிவது).
- முயற்சி, விவேகம், நற்சிந்தனை உடையது அதனால் சுதந்திரமானது
- பிறவுயிர்களை தன்னுயிர் போல நினைத்து உதவுதல்.
- படைப்பில் வந்து போகின்றதை கண்டு வருத்தபடாது.

**<u>ஏழ்மையான வாழ்வியல்/மனம் என்பது:</u>**

- எவ்வளவு பெற்றும் நிறைவற்ற மனம் (பொறாமை, போட்டி, ஏராளமான நிறைவேறாத ஆசைகளை கொண்டது, ஏக்கத்துடன் உடலை விட்டு பிரிவது).
- முயற்சி, விவேகம், சிந்தனை இவ்வனைத்தும் மனம் நிறைவற்ற காரணத்தால் சுதந்தரமற்றதாகிறது, பாதுகாபற்றதாகிறது, சந்தேகமுற்றதாகிறது.
- பிறவுயிர்களுக்கு உதவும் மனபான்மையற்றது.
- படைப்பில் வந்து போகின்றதை கண்டு வருத்தபடுவது.

இந்த வித்தியாசத்தை எந்த மனம் உணருகிறதோ, அந்த மனம் (அறம், பொருள், இன்பம் மற்றும் வீடுபேறு) என்பவற்றிலிருந்து விடுபடுகிறது. இப்படிபட்ட மனதிற்கே சான்றோர்கள் கூறும் கருத்துக்கள் நன்கு விளங்குகிறது, இந்த மனமே தன்னுடைய சுயதிற்கு திரும்ப முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

**நீர்குமிழி:** இவ்வாறு உணராத மனதின் நிலை என்ன ஐயா?

**வழிப்போக்கர்:** இத்தெளிவில் நிலைபெறாத மனதிற்கு, சான்றோர்கள் எத்தனை முறை எடுத்துரைத்தாலும், அவை அனைத்தும் **சித்தத்தில் சேகரித்து கொண்ட வெறும் தொகுப்பு மட்டுமே**, அதனால் ஒரு பயனுமில்லை.

உலகில் இது போன்ற மனங்களே பல, அதாவது கேள்வியறிவாக தான் கேட்டதை அனைத்தையும் சித்தத்தில் சேகரித்து வைத்துகொண்டு, தனக்கு எல்லாம் தெரியும் என்று மற்றவர்களிடம் கூறி கொண்டும், மற்றவர்களுக்கு உபதேசம் செய்து கொண்டும், அவர்களுடைய வாழ்வில் வரும் இருமைகளை கையாள இயலாமல் மனதளவில் சிக்கி மீண்டும் மீண்டும் சம்சாரத்தில் (பிறப்பிறப்பில்) உழல்கிறது.

**நீர்குமிழி:** ஐயா, இது போன்ற சான்றோர்களின் வாழ்வியலை பார்த்தும் ஏன் மனிதனின் மனம் தெளியவில்லை?

**வழிப்போக்கர்:** மனிதனின் மனம் முடிவெடுக்க தயாராகயில்லை நீர்குமிழி. இங்கு **வந்து, இருந்து, போகின்ற** வாழ்க்கையை உண்மை என்று நம்பி **பற்றற்றவற்றில் பற்று வைத்து தன் சுயத்தை பற்ற தயங்குகிறது**. இதனை திருமந்திரத்தில்:

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அற்சிக்கத் தானிருந் தானே ||

தானே தனக்குப் பகைவனும், நண்பனும்
தானே தனக்கு மறுமையும், இம்மையும்
தானே தனக்கு வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே! - **திருமூலர்**

இதனை ஒரு உதாரணத்தின் மூலம் காண்போம். ராமர் என்பவர் தன்னுடைய வேலை நிமித்தமாக வேறொர் ஊருக்கு செல்கிறார், அவர் செல்லும் அந்த ஊரானது அவ்வரசாங்கத்தால் நன்றாக பராமரிக்கபட்டிருந்தது (அதாவது நல்ல தரமான சாலைகள், நவீன விளக்குகள், மக்களிடையே சமூக ஒழுக்கம், அனைத்திலும் ஒரு ஒழுங்குமுறை, தொழில் நுட்பத்திலும் உச்சத்தை பெற்றிருந்தது).

இதை கண்டும், வியந்தும், லயித்தும் ராமர் அவ்வூர் தெருக்களை பார்த்து கொண்டு, தன்னை மறந்த நிலையில் அவர் வசிக்கபோகும் இருப்பிடத்திற்கு ஒரு காரில் புறப்பட்டார். காரில் அமர்ந்தபடி அவருடைய கண்களும், மனமும் அவ்வூரையே (புறவுலகையே) பார்த்து ரசித்து கொண்டிருந்தது.

அவருடைய மனதால், அந்த ஊரின் பிரமிப்பிலிருந்து வெளிவர இயலவில்லை. அதனால் தனது வீட்டிற்கு கூட, தான் ஊர் வந்து சேர்ந்து விட்டேன் என்று கூறவும் சில மணி நேரம் மறந்து விட்டார். பின்பு அவருடைய இல்லத்திலிருந்து அழைப்பு வந்தது. அவர் போனை எடுத்து, நான் வந்து சேர்ந்துவிட்டேன், ஊர் மிகவும் அழகாக இருந்ததால் இருக்குமிடத்திற்கு சென்று போன் செய்யலாம் என்று இருந்தேன் என்று கூறினார். இவ்வனுபவம் ராமருக்கு மட்டுமல்ல நம்முடைய வாழ்விலும் ஏற்பட்டிருக்கும் என்பது திண்ணமே. இங்கு கவணிக்க வேண்டியது, எப்படி ராமர் தன்னுடைய மனதினால் தான் வந்து, இருந்து, போகின்ற அவ்வூரின் அழகில் சில மணி நேரங்கள் மயக்கபட்டிருந்தாரோ?

அதுபோல இந்த உலகமும் நமக்கு, அதாவது நாம் **பிறந்து, இருந்து, இறந்து** போகின்ற ஒரு நிகழ்வு மாத்திரமே. இதில் நாம் எதற்காக வந்தோம் என்பதை மறந்து, புறவுலகின் தாக்கத்தாலும், ஆதிக்கத்தாலும் வந்த வரவை மறந்து விடுகிறோம். அது எவ்வறெனின் மனதினுடைய மயக்கத்தால்.

- **உடலழகில் லயிப்பது:** பல்வேறு ஆடைகளை அனிந்து, தன்னுடைய உடல் அழகில் மயங்கி, முதிர்வை கண்டு அஞ்சி, தன்னை எப்பொழுதும் இளமையாகவே வைத்திருக்க முயற்சிகளை மேற்கொண்டு மனநிறைவு ஏற்படாது, கால விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது.

- **உணவில் லயிப்பது:** ஊர் ஊராக சுற்றி உணவே பிரதானம் என்று வாழ்ந்து போகின்றது. இந்த மனதிற்கும் சரி, வயிற்றுக்கும் சரி, போதும் என்ற நிறைவு ஏற்படாது, கால விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது.

- **இருப்பிடத்தில் லயிப்பது:** தான் வசிக்கும் இடம் இவ்வாறு இருக்க வேண்டும் என்று கல்லாலும், மண்ணாலும், மரத்தாலும் ஆன கட்டிடத்தை பேணி காப்பதிலேயே காலத்தை விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது.

**பொருளில் லயிப்பது:** தனக்கும், தன்னுடைய சந்ததியினருக்கும் பொருள் சேர்த்து வைப்பதிலேயே காலத்தை விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது (இதன் மூலம் தன்னுடைய சந்ததியினரை சோம்பேறி ஆக்குகிறது).

**புறஅறிவில் லயிப்பது:** தன்னை அனைவரும் அறிவாளி என்று போற்ற வேண்டும் என்பதற்காக, புற அறிவை சேகரிப்பதிலேயே கால விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது, மாறாக **தன்னை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும்** என்பதை ஏற்க மறுக்கிறது.

**உறவுகளில் லயிப்பது:** உறவுகளின் புறநோக்கு மகிழ்சிகாகவே (தாய், தந்தை, பிள்ளைகள், உடன் பிறந்தோர், பந்தங்கள், கணவன், மனைவி, நண்பர்கள்) வாழ்ந்து இறுதியில் உறவுகளால் காயப்படுத்தப்பட்டு, காலத்தை விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது.

**உணர்ச்சிகளில் லயிப்பது:** உடலாலும், மனதாலும் உண்டாகும் உணர்வுகளினால் உந்தப்பட்டு, தனது உடலையும், மனதையும் போகத்திலேயே ஈடுபடுத்தி, காலத்தை விரயம் செய்து இறுதியில் மரணத்தை அடைகிறது.

இவ்வாறு ஒவ்வொரு மனமும் புறநோக்கு உலகில் மயங்கி, தனக்கு எதற்காக இந்த மானிட பிறவி கொடுக்கபட்டுள்ளது என்பதை மறந்து, மற்ற ஜீவராசிகளை போல மனிதனும் **பிறந்து, இருந்து, புணர்ந்து, இறந்து** சம்ஸாரத்தில் (பிறப்பிறப்பில்) உழலுகிறான். இதனையே:

வந்த வரவை மறந்து - மிக்க
மாதர்பொன் பூமி மயக்கத்தில் ஆழும்
இந்தம யக்கை அறுக்க - எனக்கு
எந்தை மெய்ஞ்ஞான எழில்வாள் கொடுத்தான் **- தாயுமானவர்**

**நீர்குமிழி:** ஐயா, மனிதனுடைய மனம் முடிவெடுக்க இயலாமைக்கு காரணம் தெரியவில்லையா அல்லது புரியவில்லையா?

**வழிப்போக்கர்:** மனதிற்கு எல்லாம் தெ(பு)ரியும் நீர்குமிழி, ஆனால் அது தன்னுடைய தனித்தன்மையை விடுவதற்கு தயாராகயில்லை. ஏனெனில் தன் தனித்தன்மையை இழந்த மாத்திரத்தில் **தான்** இல்லாமல் போய்விடுவோம் என்று அதற்கு நன்றாக தெரியும்.

**நீர்குமிழி:** தனித்தன்மை என்பது என்ன ஐயா?

**வழிப்போக்கர்:** ஆத்மாவகிய நான், எதிலும் சங்கமிக்காமல் ஏகமாய், நித்தியமாய், ஆனந்தமாய் எப்பொழுதும் இருக்கிறேன்.

ஆத்மாவாகிய என்னிடத்தில் கற்பிக்கப்படும் அனைத்தும் தனிதன்மையே. நித்தியமான என்னிடத்தில் அநித்தியமான **உறவாசை, பொருளாசை மற்றும் புகழாசை** என்று **நான் மற்றும் என்னுடையது** என்று கற்பித்து கொள்ளும் அகங்கார மமகாரமே தனித்தன்மை.

இந்த அநித்தியமானவற்றை விட்டு அச்சமின்றி வாழ மனம் முயற்சிக்க வேண்டும் என்பதை கவிஞர் அழகாக பாடுகிறார்:

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்று விட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்டே பொருளெலாம் இழந்துவிட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே **||1||**

கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள்வீசு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
நச்சைவாயி லே கொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
பச்சையூ னியைந்த வேற் படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே **||2|| - பாரதியார்**

**நீர்குமிழி:** அப்படியானால் இப்படைப்பிற்கு காரணம் யார் தான் ஐயா?

**வழிப்போக்கர்:** நீர்குமிழி இந்த மாய படைப்பிற்கு காரணம் **நா(மன)மே**, அதாவது நாம் இருப்பதனாலேயே இங்கு எல்லாம் இருக்கிறது. இதனை சற்று ஆராய்வோம், பொதுவாக ஒரு மனிதனுக்கு மூன்று நிலைகள், அவை:

- **விழிப்பு நிலை:** மனமானது புலன்களின் துணை கொண்டு படைப்பை படைத்து மகிழ்கிறது.

- **கனவு நிலை:** உடல் மட்டும் உறங்க, மனமானது இந்நிலையில் விழிப்பிற்கும், உறக்கத்திற்க்கும் இடையில் இயங்கி கொண்டு, தான் விழிப்பு நிலையில் சித்தத்தில் சேகரித்து கொண்ட எண்ணங்களுக்கு ஏற்றவாறு ஒரு படைப்பை படைத்து மகிழ்கிறது. ஆனால் உடல் விழித்த மாத்திரத்திலோ அல்லது மனம் ஆழ்ந்த தூக்கத்திற்கு சென்ற மாத்திரத்திலோ கனவு நிலை (படைப்பு) மறைகிறது.

- **உறக்க நிலை:** உடலும், மனமும் நல்ல ஆழ்ந்த உறக்கத்திற்கு செல்கிறது, அதாவது இந்த நிலையில் மனம் காரண சரிரத்தில் (அறியாமையில்) ஒடுங்கிறது (படைப்பு என்பதில்லை).

தன்னை உணர்ந்த மனதிற்கோ நான்காவது நிலையாகிய **துரிய நிலை** வாய்க்கிறது. இந்நிலையில் மனம் தெளிவுற்று, நிலைபெற்று **தன்னிருப்பில் இருப்பதால்**, இந்த மனம் படைத்து கொள்ளும் படைப்பு அனைத்தும் **கானல் நீருக்கு (Mirage)** ஒப்பாகும்.

எவ்வாறு கானல் நீரானது காட்சிக்கு புலப்படுமோ, ஆனால் விசாரித்து பார்த்தால் இருக்காதோ? அவ்வாறே மனதினால் படைக்கப்படும் படைப்பும், துரிய நிலையில் காட்சிக்கு புலப்பட்டாலும், விசாரித்து பார்க்கையில் உண்மையல்ல என்று விளங்கிவிடும்.

நாம் நம்முடைய **இருப்பை** எதை வைத்து உணருகிறோம்? என்று நீர்குமிழியை பார்த்து கேட்டார் வழிப்போக்கர்.

**நீர்குமிழி:** இந்த உடலையும், மனதையும் வைத்து தான் ஐயா

**வழிப்போக்கர்:** ம்ம்ம்… அப்படியென்றால் நீ யார்?

**நீர்குமிழி:** ஐயா, தாங்கள் கூறும் போது இந்த உடலையும், மனதையும் பற்றிய விஷயங்கள் புரிவது போல இருக்கிறது, ஆனால் சற்று நேரத்தில் மீண்டும் மனம் குழப்பி விடுகிறது, ஆகையால் தாங்களே விள்க்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

**வழிப்போக்கர்:** ஒரு உதாரணத்துடன் கூறுகிறேன், கேள். மின்சாரம் இருப்பது கண்களுக்கு தெரிகிறதா?

**நீர்குமிழி:** இல்லை ஐயா.

**வழிப்போக்கர்:** ஆனால் மின்சாரம் இருக்கிறது என்பதை அறிவியல் ரீதியாக ஒப்பு கொள்கிறாய் அல்லவா?

**நீர்குமிழி:** ஆம் ஐயா ஒப்பு கொள்கிறேன்.

**வழிப்போக்கர்:** மின்சாரம் இருப்பதை எப்படி அறிவது?

**நீர்குமிழி:** அதை அறிவதற்கு நமக்கு ஒரு கருவி (மின்விசிறி, பல்ப் போன்றவை) தேவைப்படுகிறது.

**வழிப்போக்கர்:** எப்படி மின்சாரத்தை அறிவதற்கு ஒரு கருவி தேவைப்படுகிறதோ? அது போலவே, ஆத்மாவாகிய தன்னை அறிய இந்த உடலும் மனமும் ஒரு கருவியாக பயன்படுகிறது என்பதை புரிந்து கொள்.

எவ்வாறு மின்சாரம் இல்லாமல் உபகரணங்கள் வேலை செய்யாதோ? அல்லது உபகரணங்கள் வேலை செய்ய மின்சாரம் தேவைபடுகிறதோ?

அவ்வாறே பிராண சக்தியும், மனோ சக்தியும் ஆத்மாவாகிய என் துணை கொண்டே இந்த உடலையும், மனதையும் இயக்கி கொண்டிருக்கிறது. ஆத்மாவகிய என் துணை இல்லாமல் எந்த சக்திக்கும் இயக்கமில்லை.

ஆத்மாவாகிய நானில்லாமல் இந்த பிரபஞ்சமில்லை என்று எந்த மனம் இந்த உண்மையை உணர்ந்து தன்னில் லயித்திருக்கிறதோ, அந்த மனமே **தன்(இறைவ)னை** உணர்ந்த உள்ளம், அந்த உள்ளம் என்றுமே உறங்காது.

அஞ்ஞான மனங்கள் இந்த உடலையும், மனதையும் தா(நா)ன் என்று எண்ணி, இதற்கு ஏற்படும் இன்ப துன்பங்களில் கட்டுண்டு உழலுகிறது. இந்த உண்மையை சான்றோர்கள் எடுத்து கூறினாலும், அதனை ஏற்காமல் அவர்கள் பரிகசித்து, எதிர் வாதம் செய்கிற அவல நிலையை தான் இன்றைய சமுகத்தில் பார்க்க முடிகிறது.

சான்றோர்கள் ஈஸ்வர சங்கல்பமாக உலகம் உய்ய ஆன்மவியல் பாடங்களை எடுத்துரைத்தால், அப்பாடங்களை கேட்டு எள்ளி நகையாடி கேளிக்கை செய்யும் கூட்டமே இங்கு உள்ளது. இந்த கூட்டமானது **இறைவன் உண்டு என்று நம்புகிற ஆஸ்திக கூட்டமே**. இவர்களை தான் **ஆஸ்திக வேடத்தில் இருக்கும் நாஸ்திகர்கள்** என்று சான்றோர்களும் கூறுகின்றனர்.

நீர்குமிழி நன்றாக கேள் - **நம் வாழ்வில் அனுபவமாகும் ஒவ்வொரு நிகழ்வும் உடலும், மனமும் செய்யும் செயல்களினால் ஏற்படும் படைப்பே**.

உதாரணமாக ஒரு மனம் ஆலயத்திற்கு செல்ல வேண்டும் என்று நினைக்கிறது என்று வைத்து கொள்வோம், இதில் என்னென்ன நிகழ்வுகள் மற்றும் கதாபாத்திரங்கள் உள்ளன என்பதை சற்று விசாரித்து பார்ப்போம்:

- மனதில் உதித்த இந்த எண்ணம் செயல் வடிவம் பெறவேண்டும் என்றால் அதற்கு உடல் வேண்டும்.
- அப்படியானால் உடல், மனம் அதனை இயக்குகின்ற ஆத்மாவாகிய நானும் இருக்கவேண்டும்.
- அடுத்து யாருடன் செல்ல வேண்டும்? (தாய், தந்தை, மனைவி, மக்கள், நன்பர்கள்….).
- எந்த ஆலயம் செல்ல வேண்டும்? சிவனா, விஷ்ணுவா, தேவாலயமா, மசூதியா, குருத்வாராவா……
- எப்படி செல்ல வேண்டும்? நடந்தா அல்லது வாகனத்திலா….
- அர்ச்சனை/அபிஷேகம் செய்ய வேண்டுமா? அப்படியானால் அதற்கான பொருட்கள் வாங்க வேண்டும்.
- அர்ச்சனை செய்ய விரும்பும் பெயர் மற்றும் விவரங்களை குறித்து கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் சரியாக நடந்தது என்றே வைத்துக் கொள்வோம், ஆலயத்திற்கு சென்று அடைந்துவிட்டோம்:

- வண்டியில் சென்றால் பார்கிங் செய்ய வேண்டும்.
- செருப்பை பத்திரமாக விட வேண்டும்.
- அர்ச்சனை/அபிஷேகம்/ சிறப்பு தரிசன சீட்டு வாங்க வேண்டும்.
- சீட்டுகள் மற்றும் அபிஷேகம் பொருட்களை அர்ச்சகரிடம் கொடுக்க வேண்டும்.
- அர்ச்சனை செய்ய விரும்பும் பெயர் மற்றும் விவரங்களை அர்ச்சகரிடம் கொடுக்க வேண்டும்.
- மன நிம்மதியுடன் தீபாராதனை, தரிசனம் செய்து முடிக்க வேண்டும்.
- ஆலயத்தை வலம் வரவேண்டும்.
- பிரசாதம் சாப்பிட வேண்டும்.

இவையெல்லாம் சரியாக நடந்தால் நிம்மதியாக விடு திரும்புவோம்.

இப்படி ஒரு மனதில் உதித்த ஒரு சிந்தனையா(எண்ணமா)னது செயல் வடிவம் பெறுவதற்கு, இத்தனை கதாபாத்திரங்களை (உடல்கள் மற்றும் மனங்கள்) ஈடுபடுத்தி ஒரு செயலை நிகழ்த்தியுள்ளது என்றால்.

அனைத்து மனங்களின் எண்ணங்கள் எல்லாம் ஒன்றொடு ஒன்று இனைந்து செயல் வடிவமாகும் போது, அது எப்பேற்பட்ட **பெருநிகழ்வாய் (படைப்பாய்)** இருக்கும் என்று சற்று எண்ணி பார் நீர்குமிழி!!!

இது தான் இப்படைப்பின் ரகசியம் மற்றும் உண்மை, இவ்வுண்மையானது விசாரம் செய்த தூய்மையான மனதிற்கே விளங்கும். விசாரனை மேற்கொள்ளாமல் மாசுடைய மனங்களுக்கு எவ்வளவு கூறினாலும் விளங்காது, மாறாக அம்மனங்கள் முன்னர் கூறியது போல எதிர்வாதமும் கேளிக்கை மட்டுமே செய்யும்.

**குறிப்பு:** மேலே சித்தரிக்கப்பட்ட விஷயங்களில், ஏதெனும் சில விஷயங்கள் சரியாக நடக்கவில்லையென்றால், உடல் மற்றும் மனதினுடைய வெளிபாடு (படைப்பு) வேறு விதமாக இருக்கும், அதனை இந்த நூலை படிப்பவர்கள் சிந்தித்து உணரலாம்.

**நீர்குமிழி:** நன்றாக விளக்கினீர்கள் ஐயா, இப்படைப்பிற்கு மூல காரணம் நா(மன)மே. அப்படியானால் படைப்பு என்பது வெளியேயில்லை, நம்மில் (மனதில்) தான் இருக்கிறது அது புலன்களின் மூலம் பிரதிப்பலிகிறது (Reflection). இதனை ஒரு கவிஞர் பாடுகிறார்:

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா இறைவா இறைவா!!

சித்தினை அசித்துடன் இணைத்தாய், அங்கு
சேரும் ஐம்பூதத்து வியனுலகம் அமைத்தாய்
அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சியமாகப்
பல பல நல்லழகுகள் சமைத்தாய்

முக்தியென்றொரு நிலை சமைத்தாய், அங்கு
முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்
பக்தியென்றொரு நிலை வகுத்தாய், எங்கள்
பரமா பரமா பரமா - **பாரதியார்**

# ஓம் தத் ஸத்

# பகுதி - 3



ஆடி மாதம் என்பதால், அந்த ஊரே ஒரே திருவிழா கோலம் பூண்டிருந்தது. வழிப்போக்கர் இன்று இந்த ஊரை வந்தடைந்திருந்தார். திருவிழா என்றதால் வானவேடிக்கைகள், சிறுவர் விளையாட்டு விஷயங்கள், எங்கு பார்த்தாலும் அன்னதானம் கூடம், தண்ணீர் பந்தல், மோர் பந்தல் என்று மக்கள் வெள்ளமாக அந்த ஊர் இருந்தது. இதையெல்லாம் பார்த்து ரசித்தபடி வழிப்போக்கர் அமர்திருந்தார்.

வழிபோக்கரே நலமா? என்ற குரல் கேட்டது.

**வழிப்போக்கர்:** நான் நன்றாக, நலமாக, ஆனந்தத்தில் நிலைத்து உள்ளேன். நீ எங்கு எவ்வாறு உள்ளாய் நீர்குமிழி? என்று வினவினார்.

**நீர்குமிழி:** ஐயா என்னை சிறுவர்கள் சோப்பு நீரிலிருந்து படைத்து விளையாடி கொண்டிருக்கிறார்கள், இதோ **நான் இருக்கிறேன்** என்று வழிபோக்கரின் முன்னால் காற்றில் பறந்து வந்து அவர் முன் நின்றது.

**வழிப்போக்கர்:** என்ன நீர்குமிழி, இப்போது நீ எதில் நிலைத்துள்ளாய்? அறிவிலா? அல்லது மனதிலா? என்று கேட்டார்.

**நீர்குமிழி:** ஐயா தாங்கள் சென்ற முறை எனக்கு நன்றாக விளக்கி கூறினீர்கள், அதனை நன்றாக சிந்தித்து தெளிவு பெற்று, அறிவில் நிலைத்து வாழ்வை அனுபவமாக்கி கொண்டிருக்கிறேன்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே - **திருமூலர்**

**பொருள்:**

மனம் யானையை பார்க்கையில் மரம் தெரிவதில்லை; மனம் மரத்தை பார்க்கையில் யானை தெரிவதில்லை; மனம் படைப்பை பார்க்கையில் பரமன் தெரிவதில்லை; மனம் பரமனை பார்க்கையில் படைப்பு தெரிவதில்லை, என்பதை தான் திருமூலர் பெருமான் இப்பாடலில் மூலம் அழகாக விளக்குகிறார்.

ஒரு யானை சிலை மரத்தால் செய்யப்பட்டு கோவிலின் வாசலில் நிறுத்தப் பட்டிருந்தது, அச்சிலை தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டிருந்ததால், நிஜ யானை போலவே பார்ப்பதற்கு இருந்தது.

இப்போது அச்சிலையை ஒரு மனிதன் பார்க்கிறான், ஒரு கனம் அவன் பார்ப்பது யானை என்று தெரிந்து, அவனுக்கு பல உணர்ச்சிகள் (ஆச்சரியம்,மகிழ்ச்சி,பயம்) ஏற்படுகிறது. பிறகு அவனுடைய மனம் அதனை உற்று பார்த்து, பகுத்தறிவை பயன்படுத்தி, ஆராய்ந்து, அந்த யானையின் அசையா தன்மையை உணர்ந்து, அது நிஜமல்ல சிலை என்று புரிந்து கொள்கிறது

அப்படியானால் மனம் ஒன்றை பார்க்கையில், அதனுடைய உண்மை தன்மையானது முதலில் அதற்கு மறைக்கப்படுகிறது, பின்பு அம்மனம் விசாரனைக்கு உட்படும் போது உண்மையை உணர்கிறது.

அதாவது எவ்வாறு கண்கள் இரண்டாக இருந்தாலும் காட்சி ஒன்றோ!! அவ்வாறே **பார்ப்பான்** அல்லது **பார்க்கப்படும் பொருள்**, இவற்றில் ஒன்றில் தான் மனமானது நிலைக்கிறது.

**<u>குறிப்பு:</u>** இங்கு கூற வரும் கருத்து, மனதை விசாரிக்காமல் வேறு எந்த செயல்களினாலும் உண்மை தன்மையை அதனால் உணர இயலாது. விசாரத்தால் தான் **மனம்** தன்னை **அறிவாக** உணர்ந்து சுயதிற்கு திரும்பும், அதுவரை இந்த சம்ஸாரமாகிய (பிறப்பிறப்பு) தொடரும்.

ஐயா, நாம் பேசி கொண்டிருக்கையில் எனக்கு ஒரு சந்தேகம் எழுகிறது, அதற்கு தயவு கூர்ந்து தெளிவுபடுத்தவும்.

**வழிப்போக்கர்:** கேள் நீர்குமிழி, சொல்கிறேன்?

**நீர்குமிழி:** ஐயா, ஏன் மனதிற்கு இருமைகளே மட்டுமே தெரிகிறது?

**வழிப்போக்கர்:** கூறுகிறேன்!!! நன்று கவணமாக கேள் நீர்குமிழி**….**

மனிதனுடைய உடலின் அமைப்பே, இருமையில் ஒருமையை உணர வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக படைக்கப்பட்டுள்ளது, அது எவ்வாறெனின்:

- **கண்கள் இரண்டு காட்சி ஒன்றே** : அதாவது ஒரு கண்ணால் ஒரு காட்சியையும், மற்றொரு கண்ணால் வேறொரு காட்சியையும் ஒரே சமயத்தில் காண இயலாது அல்லாவா?

- **காதுகள் இரண்டு கேட்கும் திறன் ஒன்றே** : அதாவது ஒரு காதால் ஒரு விஷயத்தையும், மற்றொரு காதால் வேறொரு விஷயத்தையும் ஒரே சமயத்தில் கேட்க இயலாது அல்லாவா?

- **நாசி துவாரங்கள் இரண்டு சுவாசித்தல் அல்லது விடுதல் ஒன்றே** : அதாவது ஒரு துவாரத்தால் மூச்சை இழுக்கவும், மற்றொரு துவாரத்தால் மூச்சை விடுவதும் ஒரே சமயத்தில் இயலாது அல்லாவா?

இப்படி கூறிகொண்டே போகலாம்... ஆனால் தர்க்க வாதம் செய்யும் மனங்களோ, இதனை ஏற்காமல், சான்றோர்கள் கூறும் **ஏகத்துவத்தை** பகுத்தறிவு கொண்டு ஆராயாமல், புரிந்து கொள்ளாமல், **எல்லாம் ஒன்றே** என்று கேளிக்கையும், நய்யாண்டியும் செய்கின்றது.

**எல்லாம் ஒன்றே** என்று ஒரு மனிதன் கூறிகொண்டு **தன் தாயையும், மனைவியையும், மகளையும், தமக்கையையும்** உலக விவகாரத்தில் ஒரே கண்ணொட்டத்தில் காணமுடியுமா? அப்படி செய்தாலோ அல்லது வாழ்ந்தாலோ அந்த மனிதனுக்கும் ஐந்தறிவு கொண்ட விலங்கிற்கும் என்ன வித்தியாசம்?

இதையெல்லாம் பகுத்தாராயாமல், சான்றோர்கள் சாஸ்திரங்களின் வாயிலாக கூறவரும் கருத்துக்களையும் புரிந்து கொள்ளாமல், மனதில் ஏற்றி வைத்துகொண்ட தப்பறிவால் தனக்கு எல்லாம் தெரியும் என்று **ஏகத்துவத்தை** தர்க்க வாதம் செய்து, கேளிக்கை செய்து, நய்யாண்டி செய்து கொண்டு உலகத்தில் பயணித்து கொண்டிருக்கும் மனங்களின் அவல நிலையை என்னவென்று கூறுவது நீர்குமிழி?

**நீர்குமிழி:** அப்படியானால் சான்றோர்கள் சாஸ்திரத்தின் வாயிலாக **எல்லாம் ஒன்றே** என்று எதனை கூறுகிறார்கள் ஐயா?

**வழிப்போக்கர்:** கூறுகிறேன் கேள் நீர்குமிழி!!!

எவ்வாறு ஒரே தங்கம் - வளையல், செயின், மூக்குத்தி, மோதிரம் போன்ற பலவித ஆபரணங்களாக ஜொலிக்கிறதோ?

எவ்வாறு ஒரே சூரிய ஒளி - கடல், ஏரி, குளம், குட்டை, கிணறு போன்றவற்றில் பலவாக ப்ரதிபலிக்கிறதோ?

அவ்வாறே ஒரே பரம்பொருள், உலகங்களாகவும், உயிர்களாகவும், உள்ளங்களாகவும், உணர்வுகளாகவும் மாயையால் காட்சியளிக்கிறது. அதாவது ஒன்றேயாகிய பரம்பொருளின் துணை கொண்டு மாயா சக்தியானது பல்வேறு உடல்களையும், மனங்களையும் படைத்து கொண்டு இப்படைப்பாக வெளிப்பட்டிருக்கிறது.

ஒரு கண்ணாடி அழுக்கில்லாமல் இருந்தால், அதன் மேல் விழும் பிம்பம் பார்ப்பவரின் கண்களுக்கு தெள்ள தெளிவாக தெரியுமல்லவா. ஆனால் அதே கண்ணாடி தூசி படிந்து இருந்தால், அதன் மேல் விழும் பிம்பம் பார்ப்பவரின் கண்களுக்கு மலினமாக தோன்றும் அல்லவா.

இப்போது அழுக்கை கண்ணாடியில் நீக்க வேண்டுமா அல்லது பார்ப்பவரின் கண்களில் நீக்க வேண்டுமா என்றால், கண்ணாடியில் தான் தூசியுள்ளது அதை தான் சுத்தம் செய்ய வேண்டுமென்று நாம் அனைவரின் அறிவிற்கும் புரிகிறது.

அது போல மனதிலுள்ள மாசுக்(இருமை)களை நீக்கினால், **ஏகத்துவம்** நன்றாக ப்ரகாசிக்கும் என்றே சான்றோர்கள் சாஸ்திரங்களின் வாயிலாக கூறுகிறார்கள்.

**நீர்குமிழி:** ஐயா மனம் ஏன் மாசுபடுகிறது? அதனை எப்படி சுத்தபடுத்துவது?

**வழிப்போக்கர்:** கூறுகிறேன் கேள் நீர்குமிழி!!! இது சற்று நுண்மையானது, கவணமாக கேள், உதாரணத்திற்கு

கண் என்ற (உபாதி) மூலம் → பார்வை சக்தியை (மனதை) கொண்டு → ஆத்மாவாகிய நான் (பார்ப்பான்) → அனைத்தையும் சாக்ஷியாக பார்த்து கொண்டிருக்கிறேன்.

இப்பொழுது இதிலுள்ள ஒரு முறையினை ஆராய்வோம்:

1. கண்ணாகிய புலனில் மாசு இருந்தால், மனதிற்கு பார்வை தெளிவாக இருக்காது, அப்பொழுது தெளிவற்ற தோற்றத்தை தான் பார்ப்பான் காண்பான்.

2. கண் புலன் நன்றாக வேளை செய்தாலும், பார்வை சக்தியில் (மனதில்) மாசு இருந்தால், தெளிவற்ற தோற்றத்தை தான் பார்ப்பான் காண்பான்.

3. கண் புலன் சரியில்லை என்றாலும், பார்வை சக்தி சரியில்லை என்றாலும் பார்ப்பானுக்கே தெளிவற்ற தோற்றம்.

அப்படியானால் இங்கு புரிந்து கொள்ள வேண்டியது, உபாதியும் நன்றாக செயல் பட வேண்டும், சக்தியும் நன்றாக செயல் பட வேண்டும் என்பதே. அப்பொழுது தான் பார்ப்பானுக்கு காணும் காட்சி தெளிவாக இருக்கும். இவ்விரண்டில் ஒன்றில் மாசு இருந்தாலும் பார்ப்பானின் காட்சியில் மலினம் ஏற்படும்.

தற்காலத்தின் உதாரணம் கொண்டு மேலே கூறப்பட்ட விஷயத்தை இன்னும் சற்று ஆராய்வோம்:

**ப்ரோஜக்டர் (Projector) → திரை (Screen) → பார்ப்பான் (Theatre Audience)**

**<u>குறிப்பு:</u>** இந்த உதாரனத்தில் சில தர்க்க மனங்கள் **பார்ப்பானின்** கண்களில் குறையிருக்கலாம் என்று வாதிடலாம், அதனை மேலே கூறப்பட்ட முறையில் ஏற்கனவே விளிக்கியாகி விட்டது என்று தெளிவுபடுத்துகிறோம். இப்பொழுது இந்த உதாரணத்துக்கு வருவோம்.

ப்ரோஜக்டர் லென்ஸில் குறை ஏற்பட்டாலும், திரையில் குறை ஏற்பட்டாலும், பார்ப்பானுக்கே படம் சரியாக தெரியாது.

இங்கு கூறவரும் கருத்து, முதலில் மனமே அனைத்து மாசுகளையும் உடலளவிலும், மனதளவிலும் இது சரி தவறு என்று ஏற்றி வைத்து கொள்கிறது. அதனை தப்பறிவு என்று யார் கூறினாலும், அதனை செவிமடுக்க மறுக்கிறது, மாறாக சரியான விஷயத்தை வழி காட்டுபவர்களை காயபடுத்தி எள்ளி நகையாடுகிறது.

பின்பு அதே மனம் தனது நிறைவேறாத ஆசைகளால் மீண்டும் மீண்டும் சம்ஸார சுழலில் சிக்கி பிறந்து, இறந்து அதற்கு சலித்து போகிறது. நாம் ஏன் இவ்வாறு பிறந்து இறக்கிறோம்? என்று ஏதாவது ஒரு மானிட பிறவியில் அதற்கு ஒரு கேள்வி எழுகிறது.

அப்பொழுது தான் அந்த மனம் சான்றோர்களை நாடுகிறது, இந்த புரிதல் வரும் வரை எத்தனை சான்றோர்கள், எத்தனை வகையாக, எத்தனை முறை மனதிற்கு எடுத்து கூறினாலும் அது செவி மடுக்காது மாறாக தர்க்க வாதமே செய்யும்.

இவ்வாறு சான்றோர்களை அடைந்த மனது, அவர்களின் வழிகாட்டுதலால், **நாம் தான்** மாசு பட்டுள்ளோம் என்று தன்னை வைத்தே புரிந்து கொள்கிறது. அதன் பின் அதே மனம் தன்னை சுத்த படுத்தி கொள்ள சான்றோர் கூறும் உபதேசங்களை ஏற்று, தன்னை தானே தயார் செய்கிறது (கேட்டல், சிந்தித்தல், தெளிதல் மற்றும் நிலைபெறல்). இறுதியில் மனம் தன்னை வைத்தே தன்னை சுத்தம் செய்து கொள்கிறது.

உதாரணமாக முள்ளை வைத்து முள்ளை எடுப்பது போல, கண்ணாடியை வைத்து கண்ணாடியை அறுப்பது போல, விஷத்தை வைத்து விஷத்தை முறிப்பது போல, மனதை வைத்து தான் மனதை வெல்ல வேண்டும். இதற்கு சத்சங்கம் மட்டுமே ஒரே நன்மருந்து என்றால் அது மிகையாகாது நீர்குமிழி.

**நீர்குமிழி:** அருமை ஐயா அற்புதமான விளக்கம். தாங்கள் நாம் முன்னர் பேசிய போது, இந்த மனதின் வெளிபாடே இப்பிரபஞ்சம் என்று கூறினீர், அதனை சற்று மறுபடியும் விளக்கி கூறுமாறு கேட்டு கொள்கிறேன்.

**வழிப்போக்கர்:** கூறுகிறேன் கேள் நீர்குமிழி!!! இப்பொழுது கூறும் விஷயத்தை எந்த ஒரு மனம் புரிந்து கொள்கிறதோ, அந்த மனதிற்கு தேடல் என்பது முடிந்துவிட்டது என்றே புரிந்து கொள்ளவேண்டும். மீண்டும் தேடுகிறது என்றால் இவ்விஷயம் புரியவில்லை என்றே உணரவேண்டும். அவ்வளவு தான் இங்கு புரிதல் என்பதும்.

அதாவது ஒருவர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்வோம் அல்லது இறந்து விட்டார் என்று சொல்வோம். இருந்து கொண்டே இறந்து கொண்டிருக்கிறார் என்றோ அல்லது இறந்து கொண்டே இருந்து கொண்டிருக்கிறார் என்றோ சொல்லமாட்டோம் அல்லவா?

அவ்வாறு தான் புரிதலும் கூட, விஷயம் புரிந்து விட்டது அல்லது புரியவில்லை என்பது தான் தெளிவு. அதை விடுத்து சில மனங்கள் எனக்கு புரிந்து விட்டது ஆனால் இந்த விஷயத்தில் மட்டும் ஐயம் இருக்கிறது என்று பகட்டாக நடந்து கொண்டால், அந்த மனதை என்னவென்று கூறுவது? என்பதை சற்று சிந்தித்து பார் நீர்குமிழி.

ஒரு மனிதன் உறங்கும் பொழுது இவ்வுலகமானது அவனுடைய மனதிற்கு படைப்பாக இல்லை. உறக்கத்திலிருந்து விழித்த மாத்திரத்தில் மனம் இவ்வுலகை படைத்து கொள்கிறது என்பதை அனுதினமும் அனுபவமாக்கி கொண்டுள்ளோம், இதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது.

அதாவது மனம் விழித்திருக்கும் போது இப்படைப்பு இருக்கிறது, தூக்கத்தில் இல்லை, கனவிலோ வேறொர் உலகம் படைக்கபடுகிறது. இவ்வாறு ஒரே படைப்பு ஒவ்வொரு நிலையில் (விழிப்பு, கனவு, உறக்கம்) மாறிகொண்டிருக்கிறது என்றால் அது எப்படி உண்மையாக இருக்க முடியும்? சற்று சிந்தித்து பார்.

**உண்மை** என்பது **எக்காலத்திலும், எந்நிலையிலும், எவ்விடத்திலும் மாறாதது** என்பதை சாஸ்திரங்கள் எடுத்துரைகின்றன. **பொய்மையே எப்பொழுதும் மாறி கொண்டே இருக்கும்** என்பதற்கு நம்முடைய மனமே ஒரு மிக சிறந்த உதாரணம்.

நம்முடைய அன்றாட வாழ்விலிருந்தே இதற்கு ஒரு உதாரணம் கொடுக்கலாம். அதாவது நம் மனதிற்கு ஏற்ற விஷயத்தை வேறொரு மனம் செய்யும் போது நமக்கு அந்த மனதின் மீது **விருப்பு** உண்டாகிறது. ஆனால் அதே மனம் நம்முடைய மனதிற்கு ஏற்காத விஷயத்தை செய்யும் போது அந்த மனதின் மீது **வெறுப்பு** உண்டாகிறது. நம்முடைய **மனம் தான்** ஒன்றில் விருப்புறுகிறது மற்றொன்றில் வெறுப்புறுகிறது, அப்படியானால் இங்கு இருமைகளால் மாறிகொண்டிருப்பது எது? என்பதை சற்று ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள், உண்மை எது? பொய் எது? என்பது விளங்கி விடும்.

இந்த மொத்த படைப்பும் மனோசக்தியின் வெளிபாடே நீர்குமிழி, அதாவது மனம் **தான்** படைத்து கொண்ட அனைத்தையும் புலன்களின் வாயிலாக பிரதிபலிக்கிறது (Reflection), இதனையே தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தில்:

விஸ்வம் தர்பண த்ருஷ்யமான நகரீ துல்யம் நிஜாந்தர்கதம்
பஷ்யன்னாத்மனி மாயயா பஹிரிவோத்பூதம் யதா நித்ரயயா
ய:ஸாக்ஷாத்குருதே ப்ரபோதசமையே ச்வாத்மான மேவாத்வயம்
தஸ்மை ஶ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஶ்ரீ தக்ஷிணாமூர்த்தயே - **ஆதிசங்கரர்**

**<u>பொருள்:</u>**

எவ்வாறு ஒரு கண்ணாடியானது தன் மேல் விழம் வஸ்துவை **ப்ரதிபலித்து** (Reflection) மட்டுமே காட்டுமோ? கண்ணாடிக்கென்று எப்படி எந்த ஒரு அறிவு சார்ந்த செயலும் இல்லையோ? அது போல, இந்த மொத்த படைப்பும் **மனம்** என்னும் கண்ணாடி வழியாக **பார்ப்பானிடத்தில்** ப்ரதிபலித்து காணப்படுகிறது.

வெளியே காணும் இந்த படைப்பிற்கு **பார்ப்பான்** வெறும் சாட்சி மாத்திரமே, இப்படைப்பு மாயையின் (மனோ) சக்தியால் திட்டமிடப்பட்டது; அது எப்படி எனில் உறக்கத்தில் ஒரு கனவு போல். உறக்கம் கலைந்தவுடன் கனவு கலைகிறது அல்லவா? மனம் தன் சுயமான ஆத்மாவில் நிலைத்திருக்கும் போது இந்த இரண்டற்ற தன்மையை (மாயையின் நாடகத்தை) நேரடியாக அனுபவமாக்குகிறது. அந்த **ஏக அறிவே நமது உள்ளுணர்வு** என்ற ஞானத்தை உணர்த்த வந்த ஸ்ரீ தட்சிணாமூர்த்தி வடிவாகிய குருவிற்கு நமஸ்காரம் என்பதாக ஆதிசங்கரர் மிக அழகாக பாடுகிறார்

உதாரணமாக நாம் தினமும் கண்ணாடி முன்நின்று முக அலங்காரம் செய்கிறோம், ஆனால் இங்கு எல்லோருடைய மனமும் கவணிக்க தவறுவது **உண்மை** வஸ்துவாகிய நம்மை. அதாவது நாம் இருப்பதனால் தான் கண்ணடியில் பிம்பம் தெரிகிறது என்பதை மனமாகிய **மாயை** மறைத்து விடுகிறது. ஆகையால் கண்ணாடியில் தெரியும் பிம்பமே உண்மையென்று அதனை பார்த்து மகிழ்கிறோம் அல்லது துக்கபடுகிறோம்.

அது போலவே மனம் இருப்பதினால் தான் இந்த இப்படைப்பு இருக்கிறது என்பதை உணர மறுக்கிறோம், மாறாக வெளியில் (கண்ணாடியில்) தெரியும் உலகத்தை (பிம்பத்தை) உண்மையென்று நம்பி, அதில் ஏற்படும் இருமைகளில் சிக்கி, மனம் ஏற்றி வைத்துகொண்ட தப்பறிவால் தவிக்கிறோம் என்றால் அது மிகையாகாது.

**நீர்குமிழி:** ஐயா! இவ்வாறு மனோசக்தியால் வெளிபட்ட இப்படைப்பில் நடக்கும் நிகழ்வுகளை, மனித மனங்கள் ஏன் தன்னால் தான் எல்லாம் நிகழ்கிறது என்று நினைத்து கொள்கிறது?

**வழிப்போக்கர்:** எல்லாம் மனம் தன்னிடத்தில் ஏற்றி வைத்து கொண்ட **அறியாமையாகிய அகங்காரமே** நீர்குமிழி.

அதாவது ப்ரத்யேக ஆறாம் அறிவு மனிதனுக்கு கொடுக்கபட்டதே, இந்த உடலையும், மனதையும் வைத்து மனதை நன்கு விசாரித்து, மீண்டும் வேறொர் உடலில் புக கூடாது என்பதற்காக தான். ஆனால் மனித மனங்களோ இதனை புரிந்து கொள்ளாமல், எல்லாம் என்னால் தான் நடக்கிறது என்ற செயல் அகங்காரத்தினால் மீண்டும் மீண்டும் சம்ஸாரத்தில் (பிறப்பிறப்பில்) உழல்கிறது. இதனையே பஜ கோவிந்தத்தில்:

புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனீ ஜடரே சயனம்
இஹ ஸம்ஸாரே பஹு துஸ்தாரே
க்ருபயா பாரே பாஹி முராரே - **ஸ்ரீ ஆதிசங்கரர்**

**<u>பொருள்:</u>** மறுபடியும் பிறக்க வேண்டும், மறுபடியும் இறக்க வேண்டும், மறுபடியும் தாயின் வயிற்றில் (ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரை) தங்கி பிறக்க வேண்டும். இவ்வாறு முடிவில்லாத பிறத்தல் இறத்தல் எனும் சுழலில் சிக்கியிருக்கிறேன். ஆகவே கருணை கூர்ந்து காப்பாற்ற வேண்டும் பெருமானே என்று அழகாக பாடுகிறார்.

**நீர்குமிழி:** ஐயா, மீண்டும் ஒரு சந்தேகம், தயவு கூர்ந்து தெளிவுபடுத்துங்கள். இந்த மனம் ஏன் மீண்டும் பிறப்பு, இறப்புக்கு உள்ளாகிறது?

**வழிப்போக்கர்:** கூறுகிறேன் கேள் நீர்குமிழி, மனிதன் **தான்** தற்பொழுது பெற்ற உடலின் மூலம் மனதினுடைய ஆசைகள் நிறைவேறாததால், இந்த மனதானது ஜீவதன்மை அடைந்து, அந்த நிறைவேறாத ஆசைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக அதற்கான உடல்களை எடுக்க வேண்டியுள்ளது.

உதாரணதிற்கு ஒரு மனித மனம், இந்த உடலை வைத்துகொண்டு பறக்க வேண்டுமென்று ஆசை படுகிறது என்று வைத்து கொள்வோம். நாம் எல்லோருக்கும் தெரியும் மனித உடல் பறக்க வேண்டுமானால் அதற்கு பறக்கும் கருவி (Aeroplane, Parachute, Helicpoter) தேவை, மனித உடல் தானே பறக்க இயலாது, அதற்கான அமைப்பும் இவ்வுடலுக்கு இல்லை.

இந்த யதார்த்த உண்மையை ஏற்று கொள்ளாத மனதிற்கு இவ்வாசை நிறைவேறாமல் மனித உடலை விடுகிறது என்று வைத்து கொள்வோம். இதன் காரணமாக மனமானது ஜீவத்துவம் அடைந்து, அவ்வாசையை நிறைவேற்றி கொள்ள நான்கறிவு பறவை உடலை எடுத்து அவ்வாசையை பூர்த்தி செய்து கொள்கிறது. இது போன்ற உதாரணங்களை சொல்லி கொண்டே போகலாம், ஏனெனில் இப்பிரபஞ்சமே நிறைவேறாத ஆசைகளினால் தான் இயங்கி கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது.

அது எப்படி மனம் நிறைவேறாத ஆசைகளினால் தான் ஜீவத்துவம் அடைந்து பல உடல்களை எடுக்கிறது என்று உறுதியாக கூற முடிகிறது என்ற கேள்வி படிப்பவர்களின் மனதில் எழலாம், இதற்கு மணிவாசக பெருமான்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசுராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்|| **திருவாசகம்**

என்று மிக அழகாக பாடுகிறார். இந்த பாட்டின் மூலம் அவர் அறிவு பரிமாணத்தை மட்டும் விளக்கவில்லை, மனம் ஜீவத்துவம் அடைந்தால் அறிவுள்ள மற்றும் அறிவற்ற உடல்களில், தன்னை இனைத்து கொண்டு மகிழும் என்பதையும் விளக்கியுள்ளார் என்பதை வாசகர்கள் இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது மனதில் உதித்த எண்ணத்தின் வலிமையை பொறுத்தே, ஜீவத்துவம் தீவிரமாகி அதனை அடைய முயல்கிறது. மேலும் அந்த ஆசையை அடைய அந்த மனம் எந்த எல்லைக்கும் செல்லும் என்பதை இதிகாசங்களிலும், புராணங்களிலும் படித்துள்ளோம். இதனையே திருமந்திரத்தில்

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப் பட ஆய் வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தம் ஆமே - **திருமூலர்**

**<u>பொருள்:</u>** ஆசைகள் அனைத்தையும் அறவே விட்டொழி மனமே; அவைகளை விட்டு சிவ(பரம)னை அடைந்தபின்பும், பழைய பழக்கத்தால் ஆசைகள் மீண்டும் உன்பால் (மனதில்) தோன்றுதல் கூடும். அப்பொழுதும் அதனை முளையிலேயே அறுத்தெறி; ஏனெனில் ஆசை மிகுந்து வருவதால் தான் எந்நிலையிலும் துன்பங்கள் மிகுந்து வருகின்றன. ஆசையை நீக்க நீக்க, ஆனந்தம் மட்டுமே என்று அழகாக திருமூலர் பெருமான் பாடியுள்ளார்.

**நீர்குமிழி:** ஐயா, ஆத்ம ஞானி புரிவதற்கு செயல்களில்லை என்றீர், தயவு கூர்ந்து சற்று விளக்குங்களேன்?

**வழிப்போக்கர்:** நீர்குமிழி, செயல்களில்லை என்பது மனதளவில் தான். எல்லோரும் இந்த வாக்கியத்தை தவறாக புரிந்து கொள்கின்றனர். அது எவ்வாறெனில் ஆத்மஞானி அசைவற்று இருப்பார், செயல்களற்று இருப்பார், சும்மா இருப்பார் (அதாவது ஒரு ஜடம் போல இருப்பார்) என்ற தப்பறிவில் பயணிக்கின்றனர்.

உண்மையில் இங்கு புரிந்து கொள்ளவேண்டியது உடலியக்கங்கள் செயல்பட்டு கொண்டுதான் இருக்கும், அதாவது அவருடைய இருதயம் துடிக்கும், உணவு உட்கொள்வார், சாப்பிட்ட உணவு ஜிரணமாகும், மல ஜலங்கள் வெளியேறும், தூங்குவார், தன் முன் நடந்து கொண்டிருக்கும் தோற்றங்களை பார்த்து ரசிப்பார். இங்கே புரிந்து கொள்ள வேண்டியது மனம் சிந்தை(எண்ண) துடிப்பற்று **தன்னிலேயே** இருக்கும் என்பதை தான், இதனையே ஒரு கவிஞர் மிக அழகாக பாடுகிறார்:

ஒன்றை நினைந்து ஒன்றை மறந்து ஓடும் மனம்
எல்லாம் நீ என்று அறிந்தால் எங்கே இயங்கும் பராபரமே! - **தாயுமானவர்**

படைப்பிற்கு காரணமே மனம் தான், அப்படைப்பு இருந்தால் தான் செயல்களிருக்கும். ஒருவரது மனம் அடங்கிவிட்டால் பின்பு படைப்பு என்பதில்லை, இல்லாத படைப்பில் செயல்கள் எவ்வாறு இருக்கும்? இதனையே **தன்னை உணர்ந்தவர்களுக்கு செயலகளில்லை** என்று கூறினர்.

**நீர்குமிழி:** ஐயா, பாமர மனிதன் இந்த விஷயங்களை எவ்வாறு புரிந்து கொள்வது?

**வழிப்போக்கர்:** நீர்குமிழி, நீ ஒன்றை நன்றாக புரிந்து கொள்ளவேண்டும், இங்கு பாமர மனிதன், பாமரமற்ற மனிதன் என்று எந்த பாகுபாடுமில்லை. படைப்பில் ஆறாம் அறிவு என்பது எல்லா மனிதனுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது, இதில் பாமரன், பாமரமற்றவன் என்பதெல்லாம் மனம் தான் பிரித்து பார்க்கிறது.

இதற்கு நாயன்மார்கள் வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணம் கொடுக்கலாம், சிறுகுறிப்பு தொண்ட நாயனார் எவ்வித கல்வி அறிவுமற்றவர், ஆனால் அவர் **இறைவ(தன்)னடி** சேர்ந்தார், இதற்கு அவர் மனத்தெளிவு (சித்தசுத்தி) தான் காரணம். அதாவது அகந்தையாகிய மாயையை தன்னி(ஆத்மாவி)டம் சரணாகதி செய்ததேயாகும்.

இங்கு கூற வரும் கருத்து **மனதெளிவு உண்டானால், பாமரனுக்கும் பரமதத்துவம்** விளங்கும் என்பதே. அதாவது மனமானது உள்ளம் என்ற நிலைக்கு உயர்ந்த மாத்திரத்தில் உண்மை அறிவு விளங்குகிறது. இதனை திருமந்திரத்தில் அழகாக படுகிறார்:

அறிகின்றி லாதன ஐஏழும் ஒன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென்று அருள்செய்தான் நந்தி
அறிகின்ற நானென்று அறிந்துகொண் டேனே. - **திருமூலர்**

**பொருள்:**

தன்னை அறியும் தன்மையில்லாத முப்பத்தாறு மெய்களும் (உடலும், மனமும்) **என்னால்** அறிகின்றன என்ற உண்மையினை அறியாதிருந்தேன். அறியும் தன்மையே **நீ** என்ற **பிரம்மஞானத்தை** குருவானவர் அருள செய்தார், அந்த ஞானத்தின் மூலம் அனைத்தையும் அறிகின்ற **அறிவே நான்** என்று அறிந்து கொண்டேன்.

**நீர்குமிழி:** ஐயா, பேரறிவு பற்றிய விஷயங்களெல்லாம் மனிதனுக்கு எட்டா கணியாகவே இருக்கிறது?

**வழிப்போக்கர்:** எல்லா மனிதனின் வாழ்விலும் இந்த அறிவு சார்ந்த விஷயங்கள் வந்து போகும், எந்த மனிதன் இந்த அறிவு சார்ந்த விஷயங்களை பற்றி கொண்டு அதில் பயணிக்கிறான் என்பதை அந்த மனம்தான் முடிவு செய்ய வேண்டும் (Choice is Your’s).

**நீர்குமிழி:** தாங்கள் கூறுவதை பார்தால் மனம் முடிவு எடுப்பது என்பது மிகவும் முக்கியமான விஷயமாக இருக்கிறது.

**வழிப்போக்கர்:** ஆம் நீர்குமிழி, எல்லா மனிதர்களும் முடிவெடுப்பதில் தான் சறுக்குகிறார்கள், அதற்கு காரணம் எளிமையான (அறிவு மயமான) வாழ்வு தனக்கு பாதுகாப்பற்றது (Insecured) என்ற தப்பறிவால் மயக்கமடைகிறார்கள்.

இந்த பாதுகாப்பற்ற தன்மையிலிருந்து தன்னாலே விடுபட முடியும் என்று எண்ணி, தேவைக்கு மீறிய பணம், பொருட்கள், வாகனங்கள், வீடுகள், விஷயசுகங்கள் என்று மொத்த வாழ்க்கையையும் இவைகளை ஈட்டுவதிலேயே உடலாலும் மற்றும் மனதாலும் **சக்தியை** விரயமாக்குகிறார்கள்.

அப்படி பாடுபட்டு ஈட்டிய பெருஞ்செல்வத்தை இறுதியில் நோய்பட்டு இழக்கிறார்கள். உடலும் நோய்பட்டு, உழைத்து சேர்த்த பொருளும் விரயமாகி, மனமும் நிம்மதியை இழந்து, நிறைவேறாத ஆசைகளால் மீண்டும் மீண்டும் பிறப்பிறப்பு கடலில் சுழல்கிறார்கள் என்றால் அது மிகையாகது நீர்குமிழி.

ஆனால் எளிமையான (அறிவு மயமான) பாதையில் பயணிப்போர்க்கு எல்லாவித பாதுகாப்பும்முண்டு (Fully Secured) என்பதை மனித மனம் ஏற்று கொள்ளவேண்டும், அந்த மனதிற்கு அதனை கற்று கொடுக்கவேண்டும்.

அது எவ்வாறெனில் தான் எதிர்கொள்ளும் எல்லா விஷயங்களிலும் தன்னுள்ளும் எல்லாவற்றிலும் இருக்கும் இறைவன் அருள் புரிவார் என்ற நம்பிக்கை அந்த மனதிற்கு வரவேண்டும். இதனை கவிஞர் அழகாக பாடுகிறார்:

எண்ணில்லாத பொருட்குவை தானும்
ஏற்றமும் புவியாட்சியு மாங்கே
விண்ணில்லாதவ நேர்த்திடும் ஒளியும்
வெம்மையும் பெருந்திண்மையு மறிவும்
தன்னிலாவி னமைதியும் அருளும்
தருவ ளின்றெனதன்னை யென்காளி
மண்ணிலார்க்குந் துயரின்றிச் செய்வேன்
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன் **||1||**

தானம் கேள்வி தவங் கல்வி யாவும்
தரணி மீதினி லைபெறச் செய்வேன்
வான மூன்று மழைதரச் செய்வேன்
மாறிலாத வளங்கள் கொடுப்பேன்
மானம் வீரிய மாண்மை நன்னோர்மை
வண்ணம் யாவும் வழங்குறச செய்வேன்
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான் விரும்பிய காளி தருவாள் **||2|| - பாரதியார்**

**நீர்குமிழி:** ஐயா, தாங்கள் கூறுவதை பார்தால் மனிதன் முயற்சி செய்ய வேண்டாம் என்பது போல் அல்லவா இருக்கிறது.

**வழிப்போக்கர்:** அவ்வாறில்லை நீர்குமிழி, முயற்சி தான் மனிதனை உயர்தளத்திற்கு கொண்டு செல்லும், ஆனால் இங்கு கூறவரும் கருத்து, எதில் முயற்சி செய்ய வேண்டும் என்பது தான். இதனை சாஸ்திரங்கள் **சாதன சதுஷ்டயம்** என்று கூறுகிறது:

**1. நித்யாநித்ய வஸ்து விவேகம்** - நித்ய வஸ்து எது? அநித்ய வஸ்து எது? என்ற பகுத்தறிவு வேண்டும்.

**நித்ய வஸ்து என்றால் என்ன?**

எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும், எல்லா வஸ்துகளிலும் நிரந்தரமாக இருப்பது, இதனையே சாஸ்திரங்கள் ஆத்மா, பிரம்மம், உணர்வு, இருப்பு, உண்மை, இறைவன் என்றெல்லாம் கூறுகிறது.

**அநித்ய வஸ்து என்றால் என்ன?**

தோன்றி, இருந்து, மறைவது, இதனையே சாஸ்திரங்கள் படைப்பு (அநித்ய வஸ்து) அல்லது மாயை என்று கூறுகிறது.

**குறிப்பு: நித்ய வஸ்து இல்லாமல் அநித்ய வஸ்து இல்லை**

இதனை கவிஞர், கண்ணனை நித்ய வஸ்துவாக வைத்து அநித்ய வஸ்துக்களின் தோற்றத்தையும், அனுபவத்தையும் அழகாக பாடுகிறார்:

காயிலே புளிப்பதென்னே? கண்ண பெருமானே - நீ
கனியிலே இனிப்பதென்னே?கண்ண பெருமானே!
நோயிலே படுப்பதென்னே?கண்ண பெருமானே - நீ
நோன்பிலே உயிர்ப்பதென்னே?கண்ண பெருமானே!
காற்றிலே குளிர்ந்த தென்னே? கண்ண பெருமானே - நீ
கனலிலே சுடுவ தென்னே?கண்ண பெருமானே!
சேற்றிலே குழம்ப லென்னே?கண்ண பெருமானே - நீ
திக்கிலே தெளிந்த தென்னே?கண்ண பெருமானே!
ஏற்றிநின்னைத் தொழுவதென்னே?கண்ணபெருமானே - நீ
எளியர்தம்மைக் காப்ப தென்னே?கண்ண பெருமானே!
போற்றினோரைக் காப்ப தென்னே?கண்ண பெருமானே! - நீ
பொய்யர் தம்மை மாயப்ப தென்னே?கண்ண பெருமானே!
போற்றி!போற்றி!போற்றி!போற்றி! கண்ண பெருமானே! - நின்
பொன்னடிகள் போற்றி நின்றேன், கண்ண பெருமானே! **- பாரதியார்**

**2. பற்றின்மை** - நான் (உடல்), என்னுடையது (மனம்) என்ற பற்றை நீக்குதல் வேண்டும், இதனை தெய்வ புலவர்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு **- திருவள்ளுவர்**

<u>**பொருள்:**</u>

அப்பற்றை பற்று விடற்கு என்பது **உடல் மற்றும் மனதின் பற்றிலிருந்து விடபட்டு**. பற்றற்றான் பற்றினை என்பது **ஆத்மாவாகிய இருப்பு தன்மையினை உள்ளத்தில்** பற்றுக.

**3. ஸமாதி ஷட்க ஸம்பத்தி** - சமம், தமம், விடல், சகித்தல், சிரத்தை, ஸமாதானம் போன்ற மனதகுதிகள்:

- **சமம்** - மனவடக்கம்
- **தமம்** - புலனடக்கம்
- **விடல்** - பலன்களை விரும்பி செய்யும் கர்மங்களை தியாகம் செய்தல்
- **சகித்தல்** - உடல் மற்றும் மனதால் ஏற்படும் துன்பங்களை பொறுத்து கொள்ளுதல்
- **சிரத்தை** - சாஸ்திரம் மற்றும் குருவினிடத்தில் நம்பிக்கை கொள்ளுதல்.
- **ஸமாதானம்** - மன ஒரு முகப்பாடு (கேட்டல், சிந்தித்தல், தெளிதல் மற்றும் நிலைபெறல்)

**4.முமுக்ஷுத்வம்** - முக்தி அல்லது வீடுபேற்றில் நாட்டம். இதனையே கைவல்ய நவநீதத்தில்:

சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
ஆதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ளி னுழையாது நுழையுமாகில்
பூதசென் மங்கள் கோடி புனிதனாம் புருட னாமே - **தாண்டவராய ஸ்வாமி**


<u>**பொருள்:**</u>

சாதனம் (செயல்) இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை. ஆதலால் இந்த சாதனங்கள் நான்கும் (சாதன சதுஷ்டயம்) அடைந்தவர்க்கு அறிவு (ஸ்வரூப ஞானம்) உண்டாகும். நூதன விவேகி உள்ளம் (சித்தசுத்தி அடையாதவர் மனதில்) இந்த ஞானம் நுழையாது. நுழையுமாகில் பூத சென்மங்கள் கோடி புனிதனாம் புருடனாமே (முந்தய மனித பிறவிகளின் சித்தசுத்தியை அடைந்ததற்கான முயற்சி).

**நீர்குமிழி:** முயற்சி (சாதனத்தை) பற்றி அருமையான விளக்கம் ஐயா. சாஸ்திரங்கள் இவ்வளவு ஆழமாகவும், அழகாகவும் எடுத்துரைத்தும் ஏன் மனிதன் மீண்டும் தேவையற்ற செயல்களில் சிக்கிக் கொள்கிறான்?

**வழிப்போக்கர்:** கூறுகிறேன் கேள் நீர்குமிழி.

இதற்கு காரணம் எண்ணங்கள் மற்றும் அதன் வாசனைகள். அதாவது எந்த ஒரு எண்ணமும் உதயமாவதற்கு காரணம் வேண்டுமல்லவா? அதன் காரணம் வாசனைகளே, மனதில் படிந்த இவ்வாசனைகள் மீண்டும் மீண்டும் எண்ணமாய் உதயமாகி மனதினை செயல்களில் ஈடுபடுத்துகிறது. இந்த சுழற்சியிலிருந்து விடுபட சித்ததை சுத்தமாகி, மனதெளிவு பெறுவது மிக அவசியமாகும். அதற்கே மேலே கூறப்பட்ட **சாதன சதுஷ்டயம்** ஒரு சாதகனுக்கு பயன்படுகிறது.




சித்தத்தை தெளிவாக்கி அதிலுள்ள இருமைகளாகிய அறியாமைகளை நீக்கி. உலகம், உயிர், இறைவன் என்ற முன்னிலை படர்க்கைகளிலிருந்து விடுபட்டு, அறிவு மயமாக இருத்தலே தன்னிலையாகும்.

இவ்வாறு மனிதன், தன்னிலையில் மனதை நிலைத்து இருப்பதற்காகவே, அந்த ஏக அறிவு பல நாமரூபங்களை கொண்டு எடுத்துரைக்கபட்டதே **சாஸ்திரங்கள்**. அவைகளை வேதாந்தம், தேவாரம், திருவாசகம், திருவிவிலியம், திருக்குரான், தம்மபதம், கபிலசூத்திரம், திருக்குறள், திருவருட்பா என்றெல்லாம் அழைக்கிறோம்.

இது போன்ற மாகான்கள் இப்புவியில் தோன்றி, மனிதகுலம் மேன்மைபட கொடுக்கப்பட்ட சாஸ்திரங்களை முழுவதையும் சரியாக படித்து புரிந்து உணர்ந்து கொள்ளாத மனித மனங்கள், தன்னால் ஏற்றி வைக்கப்பட்ட தப்பறிவினால், எனக்கு எல்லாம் தெரியும் என்ற அகங்கார மமகாரத்தில் சிக்கி தன்னை இழக்கிறது, இதுவே மனித மனதின் அவல நிலை.

இவ்வுலக வாழ்வில் ஏற்படும் எண்ணங்(இருமை)களாகிய இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, ஆசை, கோவம், பொறாமை, குழப்பம், வெறி, இறுமாப்பு **இவை எல்லாம் யாருக்கு?** என்ற கேள்வியை மனதிடம் விசாரித்தால், அதன் உள்குமுறுல்கள் அடங்கி, சலனமற்று அமைதி அடையும். அந்த அமைதியில் **நான் இருக்கிறேன் (சத்சித்) என்ற தன்னிருப்பில் நிலைபெற்று இருத்தலே அறிவு/உணர்வு/ஆன்ம நிலை** ஆகும்.

இந்த கேள்வி(பயிற்சி)யை வாழ்வில் ஏற்படும் எல்லா சூழ்நிலைகளிலும், சந்தர்பங்களிலும் மனதை விசாரிக்க? மனமானது உலகு, உயிர், இறைவன் போன்ற புறவிஷயங்களில் இருந்து உன்முகப்பட்டு தன்னிலையாகிய அறி(உணர்)வில் எண்ணமற்று நிலைத்து நிற்கும்.

இந்நிலையில் மனம் தொடர்ந்து நிலைத்து நிற்கபடுமாயின், மனம் தனது சொரூபத்தை இழந்து, அறிவாகிய ஆத்மாவில் இரண்டற கலந்த நிலையை **ஆத்மநிஷ்டை, யோகநிஷ்டை, சமாதி** என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே அறிவை அறிகின்ற தென்றிட்டு
அறைகின்றன மறை ஈறுகள் தாமே. - **திருமூலர்**

**<u>பொருள்:</u>**

அறிவுக்கு அழிவே இல்லை, தோற்றமும் இல்லை. அறிவுக்கு அறிவு தான் மூலமே தவிர வேறு எதுவுமில்லை, அறிவை அறிவால் தான் அறிய இயலும் என்று எல்லா மறை(நூல்)களும் அறிவுறுத்துகின்றன.

***அறிவே - ஆத்மா / பிரம்மம் / இறைவன் / சைதன்யம் / உணர்வு***

இந்த ஏக அறிவை உணர்ந்த கவிஞர் மாயையை எதிகொள்ள அழகாக பாடுகிறார்:

உண்மை யறிந்தவர் உன்னைக் கணிப்பாரோ? மாயையே!
மனத் திண்மையுள்ளாரை நீ செய்வது மொன்றுண்டோ! மாயையே!
எத்தனை கோடி படைகொண்டு வந்தாலும் மாயையே!
நீ சித்தத் தெளிவெனுந் தீயின்முன் நிற்பாயோ? மாயையே!
என்னைக் கெடுப்பதற் கெண்ணமுற்றாய் கெட்ட மாயையே!
நான் உன்னைக் கெடுப்ப துறுதியென் றேயுணர் மாயையே!
சாகத் துணியிற் சமுத்திர மெம்மட்டு மாயையே!

இந்தத் தேகம் பொய் யென்றுணர் துரரை யென் செய்வாய் மாயையே!
இருமை யழிந்தபின் எங்கிருப்பாய்,அற்ப மாயையே!
தெளிந் தொருமை கண்டோர் முன்னம் ஓடாது நிற்பையோ? மாயையே!
நீதரும் இன்பத்தை நேரென்று கொள்வனோ மாயையே!
சிங்கம் நாய்தரக் கொள்ளுமோ நல்லர சாட்சியை மாயையே!
என்னிச்சை கொண்டுனை யெற்றிவிட வல்லேன் மாயையே!
இனி உன்னிச்சை கொண்டெனக் கொன்றும் வராது காண் மாயையே!
யார்க்கும் குடியல்லேன் யானென்ப தோர்ந்தனன் மாயையே!
உன்தன் போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவேன் உன்னை மாயையே!

**- பாரதியார்**

# ஓம் தத் சத்

இவ்வாழ்வில் ஏற்படும் எண்ணங்(இருமை)களாகிய இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, ஆசை, கோவம், பொறாமை, குழப்பம், வெறி, இறுமாப்பு **இவை எல்லாம் யாருக்கு?** என்ற கேள்வியை மனதிடம் விசாரித்தால், அதன் உள்குமுறுல்கள் அடங்கி, சலனமற்று அமைதி அடையும். அந்த அமைதியில் **நான் இருக்கிறேன்** (**சத்சித்**) **என்ற தன்னிருப்பில் நிலைபெற்று இருத்தலே அறிவு/உணர்வு/ஆன்ம நிலை** ஆகும்.

- பராபரன்

